# ஞானபோதினி.

ஸம்புடம் IV. } 1901ஞ் மேமீ 20உ {புத்தகம். 10

## சமயதத்துவஞானம்.

உலகத்திலுள்ள பற்பல ஜாதியாரும் தாம் வழிபட்டுவரும் கடவுள் மூர்த்தங்களின் இலட்சணங்களைப்பற்றியும், அவற்றை வழிபடுவதற்குரிய மார்க்கங்களைப்பற்றியும், அங்ஙனம் வழிபடுவதனால் விளையும் பலப்பிராப்திகளைப்பற்றியும், மதசம்பந்தமான மற்றும் பற்பல கோட்பாடுகளைப் பற்றியும், "பேதித்த சமயமோ வொன்றுசொன படியொன்று பேசாது" என்ற அறிஞர் வசனப்படி அபிப்பிராயத்தில் வேறுபட்டவர்களாயிருக்கினும், அண்ட சராசரங்கள் யாவற்றிற்கும் மேலான தனி முதற்கடவுளொருவர் இருக்கின்றனரென்பதைக் குறித்தும், அவரை ஆன்மாக்கள் வழிபட்டொழுகக் கடமைப்பட்டவைகளென்பதைக் குறித்தும், அவ்வான்மாக்கள் தாம் அடையவிரும்பும் சகல இன்பங்களுக்கும் அத்தனி முதற்கடவுளின் தண்ணருளை மேகத்தின் வருகையை யெதிர்பார்த்தேங்கி நிற்கும் பைங்கூழ்போல் நாடிநிற்றல் வேண்டுமென்பதைக்குறித்தும், கடவுள் நிர்ணயித்த விதிவிலக்குகளையுணர்ந்து அவராணையின்வழி நிற்பவர்கள் இறுதியில் ஏதோ ஒருவகையான இன்பத்தை யெய்துவார்களென்பதைக் குறித்தும் சற்றேறக்குறைய ஒத்த அபிப்பிராயமுடையவர்களாகவே யிருக்கின்றார்களென அந்தந்த ஜாதியாருடைய மத சித்தாந்தங்களை யாய்ந்தறிந்த புத்திமான்கள் நிச்சயித்திருக்கின்றார்கள். நம்முடைய தேசத்தின் அபிவிருத்தியில் மிகுதியும் நாட்டமுடைய ஒவ்வொருவரும் இந்த விஷயத்தைச் சித்தசமாதானத்துடன் கவனிப்பார்களாக. ஏனெனின் தற்காலத்தில் நமது தேசத்திலே மதத் துவேஷமென்னும் அசுத்தானிலம் மேலிடுந்தோறும் சகோதரவாஞ்சை

யென்னும் சுடர் நாளடைவிற்குன்றி ஒற்றுமையென்னும் தீபம் அவியத் தலைப்படுகின்றது. ஏதோ ஒரு மதக்கோட்பாட்டை யனுசரித்த நாம் வேறொரு மதஸ்தனுடைய சமயக்கோட்பாடு எவ்வளவு வேறுபட்டதாயிருக்கினும் அவனும் நாமும் யதார்த்தத்தில் ஒரு தனி முதற்கடவுளையே வெவ்வேறு நாமரூபம் முதலியவற்றால் வழிபட்டுவருகிறோமேயன்றிப் பிறிதல்லவென்னுஞ் சமரசஞானம் நம்மிடத்துதிக்கவேண்டுவது அத்தியாவசியம். அச்சமரசஞானமே நமக்கும் அவனுக்குமுள்ள சகோதர வாஞ்சையென்னும் சிசுவை வளர்க்கும் தாய். நம்முடைய மத சித்தாந்தமொன்றுதான் வாஸ்தவமானது, ஏனைய மத சித்தாந்தங்கள் யாவும் ஆபாசமானவை யென்னும் துரபிப்பிராயம் நம்முடைய மனத்தில் நன்றாய் வேரூன்றிவிடுமாகில் நாம் உலகத்திலுள்ள மற்றெல்லா மதஸ்தர்களையும் திரஸ்காரஞ்செய்து நம்மையே பெருமைப்படுத்திக்கொள்ள வேண்டி வரும். அதனால் நாம் தனித்துநிற்கவேண்டி வருமேயன்றி எவனும் நம்முடன் உண்மையில் உறவாடான். இவ்வாறே ஒவ்வொரு மதஸ்தனும் ஏனைய மதஸ்தர்களின் விஷயத்தில் துவேஷம் பாராட்டிக் கொண்டுவருவானாகில் தேசம் சின்னபின்னமாகி ஐக்கியம் கெட்டு நிலைகுலைந்து அன்னிய அரசர்களுக்கு ஒரு நொடியிற் சிறு கவளமாய்விடும். இவ்வாறே நமது தேசம் ஆய்விட்ட விஷயத்தை நமக்கு இத்தேசத்துச் சரித்திரம் வெள்ளிடை மலைபோல் விளக்கிக் காட்டுகின்றது.

இவ்வாறு நாம் விவகரித்துக்கொண்டு வருகையில் நாஸ்திகன் இதுதான் நல்ல சமயமென்று மெல்ல நுழைந்து சில வினாக்கள் கடாவுகின்றான். அவையெவையெனில்:—உலகத்திலுள்ள சர்வ ஜனங்களுக்கும் கடவுளென்பவரொருவரிருப்பது நிச்சயமானால் ஏனோ அவர் யாவர்க்கும் ஒரே மதத்தை ஏற்படுத்திக்கொடுக்கலாகாது? யாவரும் உய்யவேண்டிய குழந்தைகளாயிருக்கவும் அக்கடவுள் ஒருவரே பரமபிதாவாயிருக்கவும் குழந்தைகளெல்லாம் இடைவிடாது எப்போதும் ஒன்றோடொன்றுபெரும் போர் விளைத்து ஒருவரையொருவர் துவேஷிக்குமாறு அளவிறந்த சமயங்களை அக்கடவுள் ஏனோ ஏற்படுத்தல்வேண்டும்? இங்ஙனம் செய்வது சர்வஜீவ தயாபரரென்று கூறப்படும் அக்கடவுளுக்கு அழகல்லவே.

இதற்கு நாம் நியாயம் கூறுவோம். உலகத்திலுள்ள சர்வ ஜனங்களுக்கும் ஒரே மதத்தை யேற்படுத்தி ஒரே மாதிரியான அனுஷ்டானங்களை விதித்து விடுவாராகில் அக்கடவுளைக்காட்டினும் கருணையற்றவ ரொருவருமிராரென்றே சொல்லவேண்டிவரும். முதலாவது:—உலகத்தில் பற்பல பிரதேசங்களிலே சீதோஷ்ண நிலைமை முதலிய பற்பல வேறுபாடுகளிருக்கின்றபடியாலும், அவ்வேறுபாடுகளுக் கேற்றவாறு ஆங்காங்குள்ளவர்களின் ஊண் நடை உடை பாவனை முதலிய சமஸ்தமும் வேறுபட்டே யிருக்கவேண்டியபடியாலும், எல்லோருக்கும் ஒரே மாதிரியான அனுஷ்டானங்களையும் விதிவிலக்குகளையும் ஏற்படுத்துவது சர்வஜீவ தயாபராகிய கடவுளுக்கழகன்று. இது விஷயமாக அநேக திருஷ்டாந்தங்களை எடுத்துக்காட்டக்கூடுமாயினும் அவற்றிற்கெல்லாம் இங்கு இடம் போதாதாதலின் ஒருதாரணம் மாத்திரம் ஈங்கெடுத்துக் காட்டுகிறோம். இப்பரத கண்ட வாசிகளாகிய நமக்குக் கருணைப்பெருந்தடங்கடலாகிய கடவுள் விதித்திருக்கும் வேதாசமங்களிலே ஜீவவதை செய்வதையும் புலால் புசிப்பதையும் முற்றும் தவிர்த்திருக்கின்றனர். நாம் நம்முடைய தேகாரோக்கிய முதலிய நலங்களுக்கு அணுவளவும் ஹானி நேரிடாதபடியே மேல் விதிக்கப்பட்டுள்ள கடவுளின் ஆணைவழி இப்பரத கண்டத்தில் ஒழுகலாம். ஏனெனில், நம்முடைய உணவுக்காக நாற்புறமும் இங்கு காய்கனி வர்க்கங்கள் ஏராளமாய் அமைக்கப்பட்டிருக்கின்றன. பருத்தியினால் நெய்யப்பட்ட சாதாரண ஆடையொன்றே போதுமானது நம்மைக் குளிர் முதலியவற்றினின்றும் காக்க. இதே வேதாகமங்களை அக்கடவுள் (Iceland) ஐஸ்லண்ட் (Greenland) க்ரீன்லண்ட் முதலிய சீதளப்பிரதேச வாசிகளுக்கு விதித்தனரென்று வைத்துக்கொள்வோம். அங்ஙனம் அவர் செய்திருப்பாராகில அவரினும் வன்னெஞ்சப்பேதையரொருவருமிரார். ஏனெனில், அவைகள் பசும்புல்லும் தலையெடுத்து வளர முடியாத அவ்வளவு சீதளம் நிறைந்த பிரதேசங்களாகையால் அங்குள்ளார் மச்சம் பறவை முதலிய பிராணிகளைக் கொன்றுபுசிப்பது அத்தியாவசியம். பெருங்குளிர் தம்மை வருத்தாதவகைக்கு அவர்கள் மிருகங்களின் சருமங்களையே ஆடையாகத் தரித்துக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கின்றார்கள். இந்த ஸ்திதியில் உஷத்கால ஸ்நானம்,

பூஜை, ஜபம், சந்தியாவந்தனமுதலிய கருமங்களை இப்பரத கண்ட வாசிகளாகிய நமக்கு ஏற்படுத்தியிருப்பதுபோல் அப்பிரதேச வாசிகளுக்கும் ஏற்படுத்துவது அவர்களை அல்லற்படுத்துவதாகு மன்றோ? ஆகவே, அச்சீதளப்பிரதேச வாசிகள் ஜீவவதை செய்பவர்களாகவும் மாம்ச பட்சணிகளாகவுமிருப்பது ஈசுவரசம்மதமேயாம். ஆகையால், ஒன்றுக்கொன்று நேர்மாறான தன்மையுள்ள பிரதேசங்களில் வசிப்பவர்களுக்குக் கடவுள் ஒரே தன்மையான விதிவிலக்குகளை ஏற்படுத்துவது அவர் பேரருளுக் கேற்றதன்றும், இரண்டாவது:—தேக சம்பந்தமான அனுஷ்டானவகைகளில் எவ்வாறு வித்தியாச மேற்படுகின்றதோ அவ்வாறே மனதின் பரிபக்குவ விஷயத்திலும் பேதமிருக்கவேண்டியது அத்தியாவசியம். அப்பரிபக்குவங்களுக் கேற்றபடிதானே அந்தந்தப் பிரதேச வாசிகளுடைய மத சித்தாந்தங்களும் இருக்கவேண்டும்? ஒரு பிதாவுக்குப் பிறந்த பல புத்திரர்களும் ஓரிடத்திலேயே ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களாய்ச் சற்றேறக்குறைய ஒரு மாதிரியாகவே வளர்க்கப்பட்டுவரினும் அவர்களுடைய புத்திகோசரம் ஒருபடித்தாகவிராமல் வெவ்வேறு தன்மை பெற்றிருப்பதை ஒவ்வொருவரும் கண்கூடாகப் பார்த்திருந்தும், அநேக அம்சங்களில் வேறுபாடுடைய பற்பல பிரதேசவாசிகளும் ஒரு தன்மைத்தாய் பரிபக்குவமடைந்திருப்பார்களென்றுகூற எவருடைய நா எழும்? கணிதசாஸ்திரத்தில் ஒரு விஷயத்தை யெடுத்து ஒரு வகுப்பு உபாத்தியாயர் சற்றேறக்குறைய ஒரே கல்வியளவுடைய பல வித்தியார்த்திகளுக்கும் கூறுவாராகில் அதைச் சிலர் முதன்முறையிலேயே கிரகித்துக்கொள்ளுவார்கள்; மற்றும்சிலர் இரண்டாவது மூன்றாவது ஆவர்த்திகளில் தெரிந்துகொள்ளுவார்கள்; வேறு சிலர் அந்த விஷயத்தை முற்றும் தெரிந்துகொள்ள அசக்தராகவே யிருப்பார்கள். இப்படிப்பட்ட சாதாரண விஷயங்களைக் கிரகிப்பதிலேயே மானுடருடைய புத்தி வேறுபட்டிருக்குமாகில்,

* "நித்தியமாய் நிர்மலமாய் நிட்களமாய் நிராமயமாய் நிறைவாய் நீங்காச்
சுத்தமுமாய்த் தூரமுமாய்ச் சமீபமுமாய்த் துரியநிறை சுடராயெல்லாம்
வைத்திருந்த தாரகமா யானந்த மயமாகி மனவாக் கெட்டாச்
சித்துருவாய் நின்றவொன்றைச் சுகாரம்பப் பெருவெளியைச் சிந்தை
செய்வாம்."

* தாயுமானவர் பாடல்.

என்று அறிஞர் அனுபவவாயிலாகக் கண்டறிந்து கூறியமேற்போந்த குண விசித்திரமுள்ள கடவுளின் விஷயத்தைப் பற்பல பக்குவ பேதங்களையுடைய யாவருக்கும் ஒரு படித்தாய் விளக்க முயல்வது யுக்தமான தன்றாகலின் அநேக மதங்கள் உலகத்தில் நடைபெற்று வருகின்றன. அவைகள் யாவும் பகவானுடைய சம்மதமேயாகும்.

மேற்போந்த நியாயங்களினாலே உலகத்தில் அந்தந்தப் பிரதேசங்களிலுள்ள அந்தந்த ஜனங்களின் பரிபக்குவத்திற் கேற்க எத்தனை மதங்கள் தோன்றி நடைபெறினும் அவைகளெல்லாம் ஈசுவரனுக்குச் சம்மதமான மதங்களென்றே ஏற்படுகின்றது. நல்லொழுக்கத்தைக்காட்டி நன்னெறிக்கு உய்க்கத்தக்க நற்சமயம் ஒன்றிருக்க அதன் கோட்பாட்டுக்கு நேர் மாறாக வேறொருவன் வேறே ஓராபாசமான சமயத்தை உண்டாக்குவானாயினும் அஃதும் பரமபதிக்குப் பிரீதிதானென்று பொருள்பட,

* "விரிவிலா வறிவி னார்கள் வேறொரு சமயஞ் செய்தே
யெரிவினாற் சொன்னா ரேனு மெம்பிராற் கேற்ற தாகும்
பரிவினாற் பெரியோ ரேத்தும் பெருவேளூர் பற்றி னானே
மருவிநான் வாழ்த்தி யுய்யும் வகையது நினைக்கின் றேனே."

என்று சைவசமய ஸ்தாபனை செய்வதற்காகவே திருவவதாரஞ் செய்த சமயாசாரியரே கட்டளையிட்டிருக்கின்றனரென்றால் நம்போலியர் ஏனோ வேறொருவருடைய மதத்தைத் தூஷித்துச் சகோதர வாஞ்சையைக்கெடுத்துக் கடவுளுக்கு அருவருப்பை உண்டாக்க வேண்டும்? மதத்துக்குப் பெரியோர் சமயம் என்கிற பெயரிட்டிருக்கின்றார்கள். சமயம் என்றால் காலம் என்று பொருள்படும். வாசிக்கும் சமயம், உண்ணும் சமயம், உறங்கும் சமயம் என்னும் சொற்றொடர்களில் சமயம் என்னும் பதம் எவ்வாறு கால வேறுபாட்டைக் காட்டுகின்றதோ அதுபோல், இது சமணசமயம், இது பௌத்தசமயம், இது வைணவசமயம், இது சைவசமயம், என்பன ஒருவன் முறையே சமணனாகவும் பௌத்தனாகவும் வைணவனாகவும்சைவனாகவும் இருந்து கடவுளை வழிபடும் காலங்களெனப் பொருள்படும். இப்போது நாம் கூறிவரும் இந்த சமய சமரசஞான விஷயத்தைக்குறித்து நம் பெரியோர் கட்டளையிட்டிருக்கின்ற அமுதவசனங்களைச் சிறிதெடுத்துக் காட்டுவோம்.

---

* தேவாரம்.

* "வேதம்பல் பக்குவ மோர்ந்தொரு வீட்டினுக்
கோதும்பல் லாற்றுனு முந்தீபற
உண்மைகண் டார்க்கேகமுந்தீபற."

வேதமானது ஆன்மாக்களுடைய பற்பல பருவபேதங்களுக்கேற்ற வாறு ஒரு மோக்ஷவீட்டுக்கே பல மார்க்கங்களைக் கூறுநிற்குமாயினும் அவ்வுண்மையைக் கண்டறிந்தவர்கள் எல்லா மதங்களும் தம்மை யவலம்பிப்போரை இறுதியில் எம்பெருமானது திருவுள்ளப் படி முன்னும் பின்னுமாக மேலான இன்பத்துக்கே கொண்டுவந்துய்க்குமென வுணர்ந்து எந்த மதத்தையும் விரோதியாரென்று பிரமாணமிருக்கின்றது.

(இன்னும் வரும்.)

தண்டலம் - பாலசுந்தர முதலியார்.

---

## † பாரத ஸாரம்.

---

### IV-ஆம். அத்தியாயம் (சபா பருவம்.)

(பாண்டவர்களுக்கு நேரிட்ட தீங்குகள்.)

337-ஆம் பக்கத்தொடர்ச்சி.

மகாபாரதத்தைப் படிக்கும் போதெல்லாம் பூர்வீகத்தில் இந்தியா எவ்வளவு ஐசுவரிய முடையதாயிருந்ததென்பது நன்றாய்த் தெரியவரும். தெய்வபக்தி முதலும் உலக விஷயங்கள் அதற்கிரண்டாவதாயுமிருந்த காலத்து அப்படி யிருந்தது. தெய்வபக்தி குறையக்குறைய இந்தியாவின் பலமுங் குறைந்துபோய் அது பற்பல அந்நியர் கையிலகப்பட்டுத் தன்னுடைய பொருளெல்லா மிழந்தது. அந்தக்காலத்திலே நவரத்ன கசிதமான அநேக மாட மாளிகைகளும் கூடகோபுரங்களு மிருந்தனவென்று தெரியவருகிறது. யுதிஷ்டிரனைக்காண வந்தகுடிகளும் அரசரும் பற்பலவித ரத்னங்களும், சுவர்ண நாணயங்களும், சுவர்ணத்தாலாய தட்டு முட்டுகளும் அத்தகைய மற்றைச் சாமான்களும், தந்தப்பிடிகளில் ரத்னங்களிழைத்த பட்டாக்கத்திகளும், பட்டுள்ளிட்ட மெய்க்கவசங்களும், அலங்கரிக்கப்பட்ட ரதங்களும், ஆட்டு ரோமத்தாலாய பற்பல வர்ணம் வாய்ந்த கம்பலங்களும், பற்பல விதமான பட்டுவஸ்திரங்களும், அதிக விலையுயர்ந்த படுக்கைகளும், படுக்கைச் சாமான்களும் பொன்னூல் வெள்ளி நூலிவைகளாற் பற்பலப் பூப்போட்டுச் சித்திரி

---

* அவிரோதவுந்தியார்.

† Adapted from **Mrs. Annie Besant's MAHABARATA**.

த்துள்ள படுதாக்களும், பற்பல விதமான வாசனைத் திரவியங்களும், உயர்ந்த அகிலும் ஆரமும்,எண்ணிறந்த யானை,குதிரை,ஒட்டை முதலியனவும் அவருக்குக் காணிக்கையாக் கொண்டுவந்து வைத்து வணங்கிப் போவார்கள். இந்தியாவி னெப்புறமும் அக்காலத்தில் அதிக ரம்மியமாய்க் காணப்பட்டது. இன்னகாலத்திற்முன் ஏற்பட்டதென்பது இன்னும் சரியாய்க் கண்டறியக்கூடாத ஸ்ரீமத் இராமாயண மகாபாரதங்களில் எடுத்தெழுதப்பட்டிருக்கும் கிரியை யக்கியம் இவற்றினுடைய பெருமையைப்பார்க்கும்போதே இந்தியாவினுடைய அக்காலத்திய நாகரீகத்தினுயர்வும், கணக்கற்ற திரவியமும், ஏராளமான ஐசுவரியமும் மிக்கிருந்தனவென்பது நன்கு தெரியவரும். சாமானிய சனங்களும் அதிக நல்ல ஸ்திதியில் இருந்திருப்பதாகத் தெரியவருகிறது. தெய்வ பக்தியும் தர்ம சிந்தையும், நன்னடையும் இவைகளின் காரியமாக கடவுளருளுமிருக்கும் பக்ஷத்தில், விளையாத நன்மையும் உளவோ ? இகபரத்திற்குரிய எல்லாச்சம்பத்தும் அக்காலத்திருந்தன.

தருமர் செய்த அசுவமேத யாகத்திற்குப் பற்பல நாட்டரசர்களும் வந்து சேர்ந்தனர். பீஷ்மரையும் திருதராஷ்டிரரையும் அழைத்து வரும்பொருட்டுத் தர்மர் தமது தம்பியருள் நகுலனை அழைத்து அஸ்தினபுரத்திற்கு அனுப்பினர். அவர்களும், விதுரர், துரோணர், துரியோதனுதியர், கிருபர், கர்ணனென்னு மிவர்களும் பாரத யுத்தத்தில் வரும் மற்றைய வீரர்களும் வந்து சேர்ந்தனர். இவர்களெல்லோரும் வந்து சேர்ந்ததும், யுதிஷ்டிரர் தாம் யாகத்திற்குச் சேகரித்துவைத்த திரவிய முழுவதும் பீஷ்மர் துரோணுதியாராய தம் முன்னோரிடம் ஒப்புவித்து, மற்றவற்றை நடத்தத் தனக்கு உத்திரவு கொடுக்கும்படி அவர்களைவேண்டினர். யாகம் ஆரம்பித்தது முதல் கடைசிநாள் வரையில் எல்லாம் செவ்வனே நடந்துகொண்டுவந்தன. அன்றுதான் தருமர் சக்ரவர்த்தியானதற் கறிகுறியாய் அவர் மீது பரிசுத்த தீர்த்தம் சம்ரோக்ஷண மாதற்குரிய தினம். இந்த சந்தர்ப்பத்திற் கூடிய சபையில் நாரதரும் வந்திருந்தார். இதுதான் இரண்டாவதுகூடிய சபை. அச்சபையிலுள்ளாரை யெல்லாம் உற்றுநோக்கினர் முனி புங்கவர். தேவர்களெல்லாம் மானுடராய்ப் பிறக்கப் போகிறார்க ளென்பதும் ஸ்ரீமன் நாராயணனே மனுஷ்யாவதார மெடுக்கப் போகின்றனென்பதும், இன்னும் கொஞ்சகாலத்திற்குள் இச்சபையிலுள்ளா ரனைவரும் மண்ணுலகத்தைத் துறக்கச் செய்விப்பா னென்பதும் தாம் முன்னமே கேட்டிருந்தது இப்போது அவர் தம் ஞாபகத்திற்கு வந்தது. அதை நினைக்கும்போது அவர்க்கு அதுமிக்க பயங்கரமாய்த்தோன்றியது. ஆகையால்அவர் வாய்திறவாது சிந்தனையோடே வீற்றிருந்தார். பின்வரப்போகிற பெரிய யுத்தத்திற் கறிகுறியாய் இந்தச் சபையிலே சில துர்க்குறிகள் நிகழ்ந்தன. யாகார்க்கியத்தைப் பற்பல அரசர்களுக்குக் கொடுக்கும் பொருட்டுப் பீமன் அதைக்கொண்டு வரும்படி சொன்னான். முதலில் அதை எவருக் களிக்கவேண்டு மென்னும் சந்

தேகம் பிறந்தது. இந்தச் சபையிலிருப்பவர்களிலெல்லாம் யார் முதன்மை யோ அவர்க்கே கொடுக்கவேண்டிய தென்பது எல்லார்க்குந் தெரிந்தவிஷயம். யுதிஷ்டிரர் பீமனை யழைத்து "எவரை இச்சபையில் சிரேஷ்டரென மதிக்கிறாய்? யாருக்கு அர்க்கியத்தை முதலில் கொடுக்கவேண்டும்"என்றதற் குப் பீமன் ஸ்ரீகிருஷ்ணபகவானைக் காட்டி, "ஒளியுள்ள பொருள்களுக் கெல்லாம் எப்படி சூரியன் பெரியனோ, இது போன்றே இச்சபையிலுள் ளோர்க்கெல்லாம் கண்ணபிரான் தலைவர்" என்று சொன்னதும் சகாதே வன் முதலில் அர்க்கியத்தை ஸ்ரீகேசவப் பிரானுக்குக் கொடுத்தான். அவரும் அதை ஏற்றுக்கொண்டார். சேதி தேசாதிபதியாகிய சிசுபாலன் மாத்திரம் இதைக்கண்டு கோபம்கொண்டு திடீரென்றெழுந்து, பாண்டவர்களையும் பீஷ் மரையும் தங்கள் கடமை தெரிந்து நடவாததற்குச் கடிந்து, "கிருஷ்னன் அரசனா? அல்லது வயதில் மூத்தோனா? குலக்குருவா? ஆர்யனா? அவனைப் பார்க்கிலும் சிறந்தோர் இச்சபையின்கண் யாருமிலரோ? அரசர்களை யெல் லாம் வரவழைத்து ஏன் இவ்வாறு அவமானம் செய்விக்கவேண்டும். அவ னுக்கேன் முதலில் வந்தனை வழிபாடுகளெல்லாம்!" என்று கடுகடுத்துச் சொல்லி சபையினின்றுந் திரும்பிச்செல்ல யத்தனிக்க மற்ற அரசர்களிற் பலர் அவன் பின் சென்றார்கள். இதைக் கண்ட தருமர் அவனைப் பின்றொடர் ந்து வணங்கி உபசார வார்த்தைசொல்ல பீமன் அவரைத்தடுத்து, "உலகில் அநாதியாயிருக்கும்படியான ஸ்ரீ கிருஷ்ணனுக்கு வந்தனை வழிபாடுகள் முத லில் செய்யத்தகா தென்று எவன் நினைக்கின்றானோ அவனுக்கு உபசார வார்த்தையேன், மரியாதையேன்?" என்றான். மானுடவுருவுகொண்டு அங்கி ருந்த மகா விஷ்ணுவாகிய ஸ்ரீகிருஷ்ண பகவானை வெகுவாய்த் துதித்தான். பிறகு சகாதேவனும் அம்மாதிரியாகவே புகழ்ந்தான். நகுலனும், "எவ னொருவன் கமலக்கண்ணனாகிய ஸ்ரீகிருஷ்ண பகவானுக்கு முதலில் வந்தனை வழிபாடுகள் செய்யானோ அவனுயிர்த்திருந்தும் அவனை நடைப்பிணமாக வேயெண்ணல் வேண்டும். அவனுடன் கலந்து பேசலும் தகாது" என்றான்.

அந்தப் பெரிய சபை முழுதும் மனக்கலக்க மடைந்திருந்தது. யாகம் சரியாய் நிறைவேற வேண்டுமே யென்னு மேக்கங்கொண்ட யுதிஷ்டிரரைப் பார்த்து பீஷ்மர், "அப்பா தர்மா! சுணங்கன் கேசரியைக் கொல்ல நினைத் தாலும் கொல்ல முடியுமா? அச்சுத (ஸ்ரீ கிருஷ்ணபகவா)னே நித்திரை செய்யும் சிம்மம் போன்றுள" னென்றார். இதைக் கேட்ட சிசுபாலன் கோபத்துடன் வைய ஆரம்பித்தான். இதைப் பொறுக்காது பீமன் அவனு யிரை முடிக்க முயன்றான். அப்போது பீஷ்மர் அவனைத் தடுத்து "அப்பா பீமா! ஸ்ரீ கிருஷ்ணபகவான் சிசுபாலனுடைய தாயாருக்கு வாக்களித்தி ருக்கின்றனர். "அதாவது அவளுடைய பிள்ளை செய்யும் நூறு தப்பிதம் வரையில் அவனை மன்னித்து விடவேண்டு மென்பது". என்று அவன் பூர் வோத்தரத்தை எடுத்துச் சொன்னார்.

"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

என்பதனைச் சிசுபாலன் சற்றேனும் யோசியாது வைய ஆரம்பித்தான். பீஷ்மர் அவனைப் பார்த்து "நீயிப்படி வைவதனுல் யாதொரு பிரயோசனமும் அடையாய். யாங்கள் ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்குத்தான் முதலில் வந்தனை வழிபாடுகள் செய்வோம்? அதற்குரிய பயனைப் பெறுவோம். எவனொருவனிவ்வுலகை விட்டு விரைவில் ஒழிய விரும்புகின்ருனே அவனே சங்கு சக்ரதாரியாகிய கமலக்கண்ணனை வாதுக்கழைக்கட்டும்" என்ருர். சிசுபாலனுடைய இறுதிக்காலம் வந்து விட்டதென்று அவர்க்கு நன்ருய்த் தெரியும். அதற்குத்தகுந்தபடி சிசுபாலனும் வாசுதேவனை வாதுக்கழைக்க ஸ்ரீ கேசவப்பெருமான் அவனை அருகழைத்து இனிய மொழி மொழிந்து "அப்பா! உன் தாயார் நிமித்தம் நீ செய்து வந்த குற்றத்தை யெல்லாம் இது வரையில் க்ஷமித்து வந்தோம். இதனேடு நூறு குற்றங்களாகின்றன. இது வரைக்குந்தான் க்ஷமிக்கும்படி உன் தாயார் வரம்பெற்றுக் கொண்டிருக்கிருள்" என்று சொன்னதும் சிசுபாலன் மறுபடியும் இவரை நேரிலேயே வைய எத்தனித்தான். இவனிறுதிக்காலமுங் கிட்டியது. அச்சுதனும் தன் சக்கிரத்தை நினைக்க அது அவர் தம் கைசேர்ந்தது, உடனே அவன்தன் சிரசும் துணிக்கப்பட்டது. இடிவீழ்ந்த பாறைபோல் தெறித்து வீழ்ந்தான். அவன் விழவும் சண்டைக்கூச்சரவும் மனக்குழப்பமும் மாய்ந்தன. யாகம் முடிவேறுகிற வரையில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் தான் முன்னின்று எல்லாவற்றையும் பாதுகாத்தார். யாகமும் செவ்வனே முடிந்தது. அங்கிருந்த அரசர் குழாங்களும் யுதிஷ்டிரரைத் தங்கட்கெல்லாம் தலைவராக மதித்து ஆரவாரித்தனர். பிறகு பற்பல வரசர்களும் தத்தம் நாட்டிற் கேகினர். ஸ்ரீ கிருஷ்ணபகவானும் துவாரகைக்குச் சென்றனர். இவர்களெல்லாம் போவதற்குச் சற்று முன்பாக வியாசர் தருமரை யழைத்து இனி வரப்போம் கெட்டகாலத்தையும் யுதிஷ்டிரர் பொருட்டு நடக்கும் யுத்தத்தில் க்ஷத்திரியர்களுடைய நாசத்தையும் குறித்துக்காட்டிப் போயினர். ஆகையால் யுதிஷ்டிரரும் தாம் சக்ரவர்த்தியாய் அப்போது அதிக ஐசுவரியம் பெற்றிருந்த போதிலும் இனிவருங்காலத்தை உத்தேசிக்க முகமலர்ச்சியு மகமலர்ச்சியு மொழிய, விசனமுற்று யாதேனுங் கடுஞ்சொல் சொல்ல நேரில் அது யுத்தத்திற்குக் காரணமாய்ப் போய்விடும் என்ற பயத்தினுல் இன்சொல் அல்லன மொழிவதில்லையென சபதஞ்செய்து கொண்டார். *

இதற்குப் பிறகு துரியோதனன் மாத்திரம் சிலநாள் பாண்டவர்களுடன் தங்கியிருந்தான். மாதுலனுகிய சகுனியையும் தன்னுடன்கொண்டு

* வியாசபாரதம், சபாபருவம் § 34—46.

மயன்கட்டின அந்த விசித்திரமான அரண்மனையின் விசேஷங்களைப் பார்க்கும் பொருட்டுப் புறப்பட்டான். அநேக இடங்களில் மதிமயங்கி நின்றான். மயனுடைய யுக்தியினால் சமைக்கப்பட்டவற்றைக் கண்டு மயங்கினான். கண்ணாடி புதைத்திருந்த இடங்களுக்கருகில் போனபோது கீழிருப்பது ஜலமென மருண்டு தொங்கவிட்டிருக்கும் தன் வஸ்திரத்தைத் தூக்கிக் கொண்டான். ஜலம் நிறைத்துவைத்திருந்த தடாகத்தை ஆடியென்றெண்ணி நடக்க முயல ஜலத்தில்வீழ்ந்தான். ஆடியாலான கதவத்தருகிற் சென்று அங்கொன்று மில்லாதிருந்ததைக் கண்டு நேரேபோக யத்தனிக்கையில் தன் தலையில் இடித்துக்கொண்டான். இனி யிப்படி மோசம்போகக்கூடாதென் றெண்ணிப்போகையில் திறந்திருந்த புதவத்தைக் கண்டு ஆடியாலடைக்கப் பட்டிருக்கிறதென நினைத்து அதன் மீது சாய்கையில் கீழே திடீரென வீழ்ந்தான். இதைக்கண்ட பீமன் கலகலவென்று சிரித்தான். இதனையும் மற்றவற்றையுங்கண்ட நகுல சகாதேவரும், வினையாளரும் நகைத்தனர். இதைக் கண்ட துரியோதனன் கண்ணும் மனமும்சிவந்தன. அழுக்காறும் வெகுளியு மதிகப்பட துரியோதனன் மனசஞ்சலத்துடன் சென்றான். காந்தார தேசாதிபதியும் தன்மாதுலனுமாகிய சகுனியினிடம் இதைக்குறித்து முறையிட்டு இந்த அவமானத்தைப் பொறுப்பதைப்பார்க்கிலும் தன்னுயிர் துறத்தல் நலமெனச் சொல்லி, தர்மருடைய ராஜாதி பத்யமும், அவர்களுடைய ஐசுவரியமும் பிரபலமான ராஜ சூயயாகத்தையுங் கண்டால் யார் தான் மனந்தாள்வார்கள். திருதராஷ்டிரனுடைய பிள்ளைகளோ கிருஷ்ண பக்ஷத்துச் சந்திரன் போற்றேய்ந்து போகின்றார்கள், குந்தி புத்திரர்களோ நாளுக்கு நாள் சுக்கில பக்ஷத்துச் சந்திரன் போன்றொளிர்கின்றார்கள்" என்று கதறினான். மாதுலன் மருகனைக்கட்டியணைத்து இனிய வார்த்தை சொல்லி அவன் கோபத்தைத்தணித்து, "அப்பா துரியோதனா! நம்முடைய வரும்படிக்கென்ன குறைவு! அப்படி இதுவும் உனக்குப் போதாதெனக் கருதினால் பாண்டவர்களுடைய பொருளையும் சேர்த்துக்கொள்ளுகிறது தானே. அஃதென்ன அருமையா? ஆயினும் அவர்களைப்போரில் வெல்ல முடியாது. அவர்களுடைய சேனைகளோ எண்ணிறந்தன. சூது மார்க்கமாய்த்தான் அவர்களை வெல்லல் வேண்டும். குந்தி புத்திரனுக்குச் சூதாடுவதில் மிக்க பிரியமுண்டு. ஆயினும் நன்றாய் ஆடத்தெரியாது. சூதாடவா வென்றழைத்தால் வரமுடியாதென்று சொல்லான். சூதாட்டத்தில் நான் சமர்த்தனென்பது எல்லார்க்கும் தெரிந்த விஷயந்தானே. குரு புத்திரா! மூன்றுலகிலும் இதில் என்னை வெல்ல வல்லுநர் யாவர்? ஆகையால் சூதாட வரும்படி யுதிஷ்டிரனை வரவழைப்பாய். என் சாமர்த்தியத்தினால் சூதில் அவன் இராஜ்ஜியத்தையும் மற்றுமுள்ள பொருள்களையும் வென்று உனக்குத்தருவேன். மாந்தரிற்காளை போன்றோனே! ஆனால் இவற்றை அரசனுக்கு முன்னதாய்த் தெரிவித்து விடு. அவனதாணை மேற் கொண்டு சூதாட்டத்தில் யு

திஷ்டிராருடைய பொருள்களியாவும் எளிதிற் கைக்கொள்ளலாம்" என்றுதன் மருகன்மீதுள்ள அபிமானத்தால் குடியைக்கெடுக்குஞ் சகுனியிவ்வாறு துரியோதனனையாறுதல் செய்தான். பிறகு சகுனி தன் மைத்துனனாகிய திருதராஷ்டிரனிடஞ் சென்று துரியோதனனுடைய விருப்பத்தைத் தெரிவிக்க, அவன் தன் தனயனைவருவித்து அவன்றன் துர்மதியைக் கண்டித்து புத்தி சொல்லிப் போவென்றான். ஆயினும் துரியோதனன்,"முதலையும் மூர்க்கனுங் கொண்டது விடா" வென்பதற்கேற்ப தான் பிடித்ததையேசாதிக்கவெண்ணி அழுக்காற்றின் பயனாய பல துன்மொழியியம்ப லாயினன். சகுனி பாண்டவர்களுடைய இராஜ்ஜியத்தைக் கவரும்பொருட்டுக் கவராடல் நலமென்றான். திருதராஷ்டிரன் தன் தனயன் மைத்துனனிவர்களுடைய வார்த்தையைக் கவனியாது விதுரருடன் யோசனை செய்தபிறகுதான் பதில் சொல்வேனென்று சொல்லி விதுரருக்காளனுப்புவித்தான்.

துரியோதனன் தன் தகப்பனாரைப்பார்த்து, "ஐயா? தாங்களென்னுடைய விருப்பத்திற்கிசையாவிடின் என்னுயிர் உடனே துறப்பேன், அப்படித் துறந்தபின்னர் நீவிரும் விதுரரும் சுகமடைவீர்கள்" என்று புலம்பிக்கொண்டிருந்தான். விதுரர் வந்தவுடன் தன் புத்திரன்மீதிருந்த காதலினால், அவருடன் தன் தனயனுடைய விருப்பத்தையுந் தன்னுடைய சம்மதத்தை அவன் பெற்றதையுஞ் சொல்லிப் பாண்டவர்களிடம் இவரை இதனிமித்தம் தூது செலுத்தினன். விதுரர் மிக்க மனக்கிலேசமுற்றவராய் பீஷ்மரிடம் சென்றார். குருட்டரையன் மறுபடியும் தன் மூத்த பிள்ளையை வருவித்து"உன்னெண்ணத்தை நிறைவேற்றவேண்டா" மென்று மிக்க வினயத்துடன் கேட்டுக்கொண்டான். அவன் என்ன சொல்லியும் "கொடிரும்பேதையுங் கொண்டது விடா" வென்பதுபோல் முறட்டுத்தனமாய் நின்றான். இவன் அவர்களுடைய மாளிகையில் தனக்கு நேர்ந்த குறைகளை யெல்லாமெடுத்துச் சொல்லி முறையிட ஆரம்பித்தான். தன் புத்திரனைப் பார்த்து "அப்பா, அழுக்காறுடையவனாகாதே, அவர்களுடைய பொருள்களைக் கைக்கொள்ள எண்ணுவது மிக்க அறிவீனம். அந்தத்தில் அது அதிக அநர்த்தங்களை விளைவிக்கும்.

'அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்.'

அதிக ஆசையுள்ளவன் உள்ளதுமிழப்பான். தனக்குள்ளவரையில் திருப்தியுடையவன் சுகமடைவான்" என்று நல்லறிவுச் சுடர்கொளுத்தியும் துரியோதனன் மனந்துலங்காது தான் நினைத்ததையே சாதிக்க முயன்றான். தகப்பனும் தன் மகன் தனது விருப்பத்திற்கு விரோதமாயிருப்பினும் தனயன்மீதுள்ள ஆர்வத்தினால் சூதாடுவதற்குச் சம்மதித்து விடைதந்தான். அதனால் வரக்கூடிய கேடுகளின்னவெனத் தெரிந்திருந்தும் கண்ணொளியோடு மனவொளியுமிழந்த திருதராஷ்டிரன் விதி என்பதை விலக்கமுடியாதென்

றெண்ணினன். ஐயோ பாபம்! ஒருவன் தன் வினைக்குத் தானே காரணமென்பதையும், ஆறறிவுயிர்க்குரிய பகுத்தறிவு தனக்கிருக்கும் வரைக்கும் ஊழை மாற்றுவதற்கு இவன் வல்லவனென்பதையு அறியான் போலும்! விதுரர் இதை விரும்பாதவராதலால் கடைசியில் தன் தமயனை அணுகி "ஐயா! தங்களுடைய உத்திரவு அவ்வளவு சரியானதாகத் தோன்றவில்லை. இச்சூதாட்டம் நம்மவர் நாசத்திற்குக் காரணமாகும், சற்றுயோசிப்பீராக"

* "உருவழிக்கு முண்மை யுயர்வழிக்கும் வண்மைத்
திருவழிக்கு மானஞ் சிதைக்கும்—மருவு
மொருவரோ டன்பழிக்கு மொன்றல்ல சூது
பொருவரோ தக்கோர் புரிந்து."
"ஆயம் பிடித்தாரு மல்லற் பொதுமகளின்
நேயம்பிடித்தாரு நெஞ்சிடையே—மாயம்
பிடித்தாரின் வேறல்ல ரென்றுரைப்ப தன்றே
வடித்தாரின் னூலோர் வழக்கு"

என்று இன்னன சொல்லியும் அரசன் வேறுத்திரவு அளியாததைக்கண்ட விதுரர் தமயனது ஆக்ஞையையும் அரசனது ஆக்ஞையையும் நிறைவேற்ற வேண்டி காண்டவபிரஸ்தத்திற்குப் பாண்டவர்களிடம் தூதுசென்றார். அங்குச் சென்றதும் யுதிஷ்டிரரைக்கண்டு அவர் தம் சிறிய பிதா புதிதாய்க் கட்டுவித்த மாளிகையில் வந்து தம் தனயனோடு சூதாடும்படி வேண்டினா ரென்று சொல்லலும், யுதிஷ்டிரர்

* "காதல் கவராடல் கள்ளுண்டல் பொய்ம்மொழித
லீதன் மறுத்த லிவைகண்டாய் - போதில்
சினையாமை வைகுந் திருநாடா செம்மை
நினையாமை பூண்டார் நெறி."
"அறத்தைவேர் கல்லு மருநரகிற் சேர்க்குந்
திறத்தையே கொண்டருளைத் தேய்க்கும்-மறத்தையே
பூண்டு விரோ தம்செய்யும் பொய்ச்சூதை மிக்கோர்கள்
தீண்டுவரோ வென்றார் தெரிந்து."

இவ்வாறு சொல்லி அதன் பயன் சண்டையாய் முடியுமென்னுங் காரணத்தால் அதை வேண்டாமென்று மறுத்து விதுரரை நோக்கிஅவர் தம் அபிப்பிராயம் யாதென வினவினர். அதற்கவர் தருமனைநோக்கி "அப்பா சூது எல்லா தௌர்பாக்கியத்திற்குங் காரணம், சூதாடுவதற்காக உன்னை வருவித்தல் வேண்டாமென்று அரசற்குச் சொல்லித்தடுக்க முயன்றேன். அவன் என் வார்த்தையைக் கேட்டானில்லை. மேலும் என்னாலியன்றவளவில்

* நளவெண்பா.

* "ஐயநீ யாடுதற் கமைந்த சூதுமற்
றெய்துநல் குரவினுக் கிழைந்த தூதுவெம்
பொய்யினுக் கருந்துணை புன்மைக் கீன்றதாய்
மெய்யினுக் குறுபகை யென்பர் மேலையோர்."
"எள்ளுக சூதினை யிகலி வென்றதூஉங்
கள்ளமேற் கொடுவலை கரந்து வேட்டுவ
ருள்ளுற வமைத்திடு முணவை யோர்கிலாப்
புள்ளின மருந்தின போலு மென்பவே."

என்பதாயவற்றை முன்னொருகாலத்து நளற்குச் சொல்லியவண்ணம் இப்போது யானும் துரியோதனனுக்குஞ் சொன்னேன். அவனு மதைக்கேட்டானில்லை. எதுயுக்தமோ அப்படிச்செய்வாய்" என்றார். "திருதராஷ்டிரர் ஆக்ஞையாயிருந்தபோதிலும் சூதாட எனக்கு விருப்பமில்லை" என்றார் தருமர். ஆயினும் என்செய்வார் இவர்! க்ஷத்திரியதருமம் குறுக்கேநின்றது. அதாவது "சூதாடுவையோ என்று சொல்லியழைத்தால் வரமாட்டேன் என்று சொல்லுதல் கூடாதென்பது." இதை நினைத்து, தர்மர் விதுரரைநோக்கி "ஐயா, நான் அங்கு வருவதற்கு யாதொரு தடையுமில்லை. எனக்கோ சூதாட்டவிருப்பமில்லை. சகுனி என்னை அழைக்காவிடின் யான் ஆடேன். அவன் என்னைப் பரிகாசம்செய்யு மெண்ணத்துடன் அழைக்கும்பக்ஷத்தில் ஆடாதிரேன், அதை விரதமாப்பூண்டேனாகலின்" என்றார்.

தர்மர் தாமும் தந்தம்பியரும் தையலும் அஸ்தினபுரத்திற்கேகினர்கள். தர்மருக்குச் சூதாட்டத்திலிருந்த விருப்பத்திற் களவில்லை. ஆயினும் தன் மதியினால் அதனை வெளிப்படுத்தாது அடக்கிவைத்தனர். அவருடைய இக்குறைவும் ஒட்டெடுக்கச் செய்யும்பொருட்டுத் தேவர்கள் இம்மாதிரியாகக் கொண்டுவந்துவிட்டார்கள். அவர்கள் அஸ்தினபுரம் சேர்ந்ததும் புதிதாய்க்கட்டுவித்ததோர் மாளிகையிற் றங்கினர். இதிற்கூடினது தான் மூன்றாவது சபை. இதனோடு பாண்டவர்க்குரிய தீங்கு முற்றுப் பெற்றது. †

சூதாட்டத்தில் வல்லவனாகிய சகுனி தருமரைநோக்கி "என்னுடன் சூதாட நும்மால் முடியுமேல் சீக்கிரம் வருக" என்றழைத்தனன். தருமர் அதற்குச் சம்மதித்து ஆட்டத்திலாயினும் சூதில்லாதிருத்தல் வேண்டுமென்று விரும்பினர். சகுனி "யான்தான் ஜயம் பெறுவேன், இது நிச்சம்! உம்மால் முடியாதென்று நினைத்தீராகில் ஆடாதுவிட்டு விடலாம்" என்று பரிகாசமாய்ச் சொன்னான்.

‡ "வேலை கரையிழந்தால் வேதநெறி பிறழ்ந்தால்
ஞால முழுது நடுவிழந்தால்—சில

* நைடதம். † சபாபருவம். § 47—58. ‡ நளவெண்பா.

மொழிவரோ செம்மை யுறைதிறம்பாச் செய்கை
யழிவரோ செங்கோ லவர்."

என்று நளன்சொன்னதுபோலவே தாமும், "சொன்னசொல் பிறழேன். சத்திபத்தினின்றுந் தவறேன். இது என் சபதம்" என்றார். ஆயினும் அவருடன் தகுந்தபந்தயம் வைத்தாடக்கூடியவர் யாவருளர்? அதற்காகத் துரியோதனன் முன்வந்து தன் ஆஸ்தியை யெல்லாம் பந்தயமாகவைத்துத் தனக்குப் பிரதிநிதியாய் தன்மாதுலனையாடச் செய்தான். "சூதாட்டத்தில் ஒருவர் மற்றவர்க்காக ஆடுவது கூடாது. இது வழக்கத்திற்கு விரோதமானது. ஆயினும் தகாததை மேற் கொண்டொழுக விருப்பமிருக்கும் பக்ஷத்தில் ஆட்டத்தை ஆரம்பிக்கலா" மென்றார் தர்மர்.

ஆட்டத்தையும் ஆரம்பித்து விட்டார்கள். தர்மர் தம்முத்துமாலையை முதல்முதல் பந்தயமாக வைத்தார். வட்டை உருட்டினான் சகுனி. உடனே "மாலையை வென்றே" னென்றான். பிறகு தனக்குரிய பொன்னையும் வெள்ளியையும் மற்றுலோகங்களையும் வைத்தனர். அவற்றையும் வென்றான் சகுனி. தன்னிரதத்தை வைத்தார் அதையும் உடனே வென்றான் சகுனி. பிறகு பெண்ணடிமைகளையும் வைத்தார், வென்றேனென்றான். பிறகு ஆணடிமைகளைப்பந்தயமாக வைத்தனர். அவர்களையுந் தனதாக்கிக் கொண்டான். பிறகு தர்மர் தம் களிற்றினத்தையும் பிடியினத்தையும், பிறகு சதுரங்கத்தின் மற்றவற்றையும் வைத்தார். சகுனி முன்போலவே வென்றான், இவைகளையுங் முன்போலவே கொண்டான். இதைப் பார்த்திருந்த விதுரர் மனம் பொறாது, பாண்டவர்களுடைய நிலையைக்கண்டு பரிதபித்துத் தன் தமயனைப்பார்த்து "ஐபகோ! இப்போதாயினும் இதனை நிறுத்துமின். கவராடல் கடைசியில் அனர்த்தமாய் முடியும். துரியோதனனு பாண்டவர்களுடன் சூதாடுவது! அவன் வெல்வதைக்கண்டு பரமானந்தங் கொள்கின்றீரே! இது தான் கடைசியில் பெரும் போர்க்குக்காரணமாய் முடியும். அதன் காரியமாக மனிதர்களெல்லாம் நாசமடைய வேண்டிவரும். பாண்டவர்களுடைய பொருள்களைக் கவர்வதினால் என்ன லாபம் அடையப் போகின்றீர். இதற்குப் பதிலாய்ப் பாண்டவர்களையே வென்று உம்மவராக்கிக்கொண்டால் அவர்களுடைய பொருள்களைவிட அவர்கள் மிக்க பிரயோசனமுடையராவார்கள். சூதாட்டத்தில் சுவலனுடைய சாமர்த்தியம் நமக்கெல்லாம் தெரிந்த விஷயந்தானே. இந்த மலை அரசனுக்கு அநேக விதங்களில் வட்டை யுருட்டி இந்திரஜாலம் செய்யத் தெரியும். எல்லாம் மோசமே யொழிய வேறொன்று மில்லை. வந்த வழியே சகுனியும் போகட்டும், ஓ பாரதா! பாண்டவர்களுடன் போர் புரிவதற்கு வைத்துக்கொள்ளாதே" என்று தெருட்டினன். துரியோதனன் விதுரரை நோக்கி "ஐயா! அன்னமிட்ட வீட்டிற்குக் கன்னமிடுவீர் போலும். ஏன் இவ்வளவு பக்ஷபாதமாய்ப்பேசு

கின்றீர். இவ்விடத்தை விட்டுப்போய்விடும். கற்பற்ற பெண்டிரை எவ்வளவு வாஞ்சனை யுடன் வைத்திருந்தபோதிலும் அவர்கள் தம் நாயகனை மோசஞ் செய்து பரபுருஷனிடஞ்சேர்வதிலேயேஎண்ணமுடையவர்களாயிருப்பர்கள். நாமென்செய்வது" என்று கடுகடுத்து மொழிந்தான். இவ்விதமான வார்த்தைநாராசம் போற் காதிற்பாய்தலும் விதுரர் தம் தமயனை நோக்கி "பக்ஷபாதமில்லாமல் தங்களுடைய எண்ணத்தைத் தெரிவிப்பீர்களாக" என்று சொல்லித் துரியோதனனுக்கும் புத்திமதி கூறினர். "அப்பா துரியோதனா! என் மீது கோபிப்பதினால் யாது பயன்! குணத்தைக்குறியாது செவிக்கினியன மாத்திரம் சொல்வோர் உன்னுண்மைச் சினேகிதராகார். அத்தகையர் உன்னன்மையை நாடினவரல்லர். அவர்களை நம்பி மோசம் போகாதே. அத்தகையர் அநேகர் அகப்படுவார்கள்.

"நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு"

இத்தகையர் அகப்படுவதோ மிகவுமருமை. விருப்பு வெறுப்பென்பதை மாத்திரம் கவனியாது நலமுள்ளதையுங் கவனித்துப் புத்தி கூறுபவனெவனோ அவன்தா னுன்உண்மையான சிநேகிதன். நீ என்னை யிகழின் எனக்குப் பாதகமில்லை" என்று சொல்லி மனவருத்தத்துடன் அச்சபையினின்றும் நீங்கிச் சென்றனர்.

அவரிவ்வளவு சொல்லியும் சூதாட்டம் நின்றபாடில்லை. தருமர் தம் ஆடு மாடு சேனைவேலையாட்கள் குடிகள் தமது சிற்றரசர் எல்லாம் பந்தயமாகச் சென்றன. இனி ஐவரும் திரௌபதையுந்தானிருக்கிறார்கள். நகுல சகாதேவர்களையும் பிறகு பீமரர்ச்சுனர்களையு பந்தயவைத்திழந்தார். "இனியுன்னுடையதென்று ஏதேனுமிருப்பின் அதை வைத்தாடும்" என்றான் சகுனி. தம்தம்பியர் நால்வரும் பலவீனராய் நின்றார்கள். மேலும் அடிமைத்தனம் பூண்டுபராதீனமாய் விட்டார்கள். ஐயகோ! அவர்கட்கும் துர்அதிஷ்டம் வந்துசேர்ந்ததே! அதை மாற்று மார்க்கம் யாதொன்றும் காணேம். அவர்கள் விதியானது இதனினும் யாது கொடிய செய்பவல்லது. ஐவரும் துக்காக்கிராந்தராய் மவுனமாயிருக்கும்போது சகுனி தர்மரைப்பார்த்து "ஐயா! ஏன் மவுனம் சாதிக்கின்றீர். உம்முடைய பொருள் இன்ன மொன்றிருக்கின்றதே. வேண்டுமாயின் பாஞ்சாலியைப் பந்தயம் வைத்துப் பாண்டவரை மீட்டுக்கொள்ளுமே" என்றான். அவளுடையபெயர் சகுனியின் வாயிலிருந்து வரக்கேட்டுத் துன்பமுற்றுத்துடித்து "அந்தோ! நமது கதியும் இப்படியாயிற்றே. கிருஷ்ணையையுந் துறக்க வேண்டுவதோ? இல்லறத்தை எவ்வளவு மேன்மையாய் நடத்திக் கொண்டு வந்தவள். மற்றவர்களையு மில்லாளெனத் தகுமோ? இவளையும் பந்தயம் வைத்துத் தோற்க வேண்டுமோ" என்று தமக்குள் பேசிக்கடைசியில் ஒரு வேளை ஜயித்தால் எல்லாரையு மீட்கலாமென்ற எண்ணத்தினாலும்

குதினிடத்தில் தமக்கிருந்த ஆவலினாலும் அவளையும் பந்தயமாக வைத்தார். சபைமுழுதும் மனங்கலங்கி நின்றது. அழுவார் சிலரும் சிரிப்பார் சிலருமாயினர். சகுனிவட்டை உருட்டித் திரௌபதையினையுங் கொண்டான்.

(இன்னும்வரும்.)

கல்குளம்-குப்புசாமி முதலியார்.

---

## * ஒழிவிலொடுக்கச் சிறப்புப்பாயிரவுரை.

---

(116-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

" வள்ளல் குருராயன் வாதுவென்ற சம்பந்தன்
வள்ளன்மலர்த் தாடலைமேல் வைத்துரைத்தா—னுள்ளத்
தழிவிலடுக் குந்தேனை யன்பரெலா முண்ண
வொழிவி லொடுக்கநூ லோர்ந்து."

வள்ளலென்பது (இரண்டாவதடியில்) பிள்ளையார்க்குக் காரணச் சிறப்புப் பெயராகக்கொண்டு பொருள் கூறுவாருமுளர். அங்ஙனங்கூறின் இத்துணைச் சிறப்பின் றென்று மறுக்க. என்னெனின், அவயவச் சிறப்பான வயவிக்குணம் வெளிப்படுத்தலே பெரும்பாலு மின்பமாகலி னென்க. இதனைப் " போற்றிமாலுன் முகனுங் காணாத புண்டரிகம்" என்பதனாற் காண்கவென்க. வள்ளமலர்த்தா ளெனப்பாடமோதி வள்ளம்போலுங் குவிந்தவாய் மலரென மலர்க்கடையாகவுரை விரிப்பாருமுளர்; அங்ஙனம் விரித்தலித்துணைப் பெரும்பயனின்றென மறுக்க. இங்ஙன மின்னும் விரிக்கிற் பெருகுமென்க.

மலரென்பது, வள்ளற்றன்மையின் அருகுவைத்தமையின் ஈண்டு நிறைதலுங் குறைதலுமாயுள்ள நீர் நிலைக்கட்டோன்றியு மழிந்தும் விரிந்தும் குவிந்தும் வாடியு நின்று வண்ணமு நறையு வாசமுஞ் சிறிதேசிறுபோதுகொண்டு பறித்தலாதிய சிறுதொழிற்படு மலர்களை நீக்கி ஆண்டுத்திரிபிலாத் தெய்வத்தெண்ணீர் நிலைக்கண்ணெழியாமலர்ச்சியும்அழியாமணமும் பொன்னிறப்பொலிவும் இன்னறவொழுக்கு மென்மையுந் தண்மையும் வியப்புறுமுருவுங் கண்டோர் கண்கவர்காட்சியு மாட்சியுங்கொண்டு முக்காலமுங் குன்று மலரைக் குறித்தமை காண்க. என்னெனிற் பிள்ளையாற் திருவடிகள்

---

* ஒழிவிலொடுக்கம் கண்ணுடைய வள்ளலா ரென்பவரா லியற்றப்பட்டது; இவ்வுரை திருவருட் பிரகாச வள்ளலாரென்னும் வடலூர் இராமலிங்கப்பிள்ளை யவர்களாற் செய்யப்பட்டது.

மெய்ஞ்ஞான விளக்கமா யருண்மணம் வீசிப் பொன்னிறம் பொலிந்து
ஆனந்தமொழுக்கி மெல்லெனவுற்றுத் தண்ணெனக் குளிர்ந்து தரிசிக்கின்
றோர் வியப்புறு முருவா யவரது விருப்பநோக்கம் பரவவென்று மொருதன்
மையவா யிருக்கின்றமையினென்க. ஆயின் மலர்போலுந் தாளென் றுவமை
விரிந்தபடி நிற்றற் கிடங்கொடாது மலர்த்தாளென்ற தென்னெனின் அத்
தெய்வத்திரு மலர்தனைக் கண்டோர்க்குச் சிறிய விடயாநந்தந் தருதலே
யன்றித் திருவடிபோற் சிவானந்தந் தரமாட்டாச் சிறுமைநோக்கி யென்க.

அல்லதூஉம் சுபவடிவாய் எவ்வகைச் சுபங்கட்கு முன்னின் றதனை
விளங்குறச் செய்வதாய் மகிழ்வுடையோர் யாரு மேற்கொண்டணியப்படுவ
தாய் நிற்கு நன்மலர்போலு மெனக்கூறினுமமையும். என்னெனின், திருவடி
கள் அருள்வடிவா யானந்தப் பேற்றிற்கு முன்னின்றளிப்பதா யறிவுடை
யோர் தந்தலைமேற் கொண்டணியப்படுவதாய் நிற்றலினென்க.

அல்லதூஉம், மலரையடைந்த வண்டுகள் அதனது தேனுண்டு களிகொ
ள்ளுதல்போற் றிருவடிகளை யடைந்தோரும் அருளாநந்தம் பெற்றிறுமாத்த
லி னிங்ஙனங் கூறியதெனினு மமையுமென்க. இதனைத் தொகையுவமையணி
யாகக் கூறலின்றி வள்ளன் மலர்த்தாளெனக்கூட்டி யற்புதத்தொகையுவமை
யணியாகக்கொண்டு பொருள் கூறுவாருமுளர். அவர் கூறுங்கூற்றிற் பெரும்
பயனின்றெனமறுக்க. இஃதின்னும் விரிக்கிற் பெருகுமென்க.

தாள் என்பது அடிகட்கன்றியும் முயலுதற்கும் உண்ணின்ற பொருள்
வெளிப்படாமைக்கு மதனை வெளிநின்றோருட் சென்று கவரப்படாமைக்குங்
காப்பாகக் காப்பினிற்குங் கருவிக்கு மணிதற்கணியினிருகடையு மிணைத்து
நிற்கு மிடைப்பூட்டிற்கு மிடனாகி வந்த பல பொருளொரு சொல்லாகலின்
திருவடிகள் தம்மை யடைந்தோரை யாநந்தநிலையுட் சேர்த்தலும்,அங்ஙனஞ்
சேர்ந்தோர் மீட்டு மவ்வாநந்த நிலையினின்றும் போதவசைவு தோற்றி
வெளிப்படாமைக்கு மவத்தைகளுட் சென்று தாக்கிக் கவரப்படாமைக்குங்
காப்பாக வருளுருவா யதன் முன்னிற்றலுஞ் சிவத்துடன் சீவனை யிடை
நின்று கூட்டுவித்தலுங் குறித்தது காண்க. இக்குறிப்புணர்த்தவன்றே
மலர்க்கழலென்னாது மலர்த்தாளென்றதென் றுணர்க.

தலைமேல்வைத்து என்பது ஆசிரியர் தம்மாசாரியராகிய பிள்ளையார்
திருவடித்தீக்கை செய்யத் தாம் பெற்றமை குறித்தது காண்க. அஃதேல்
வைக்கப்பட்டு எனச் செயப்பாட்டு வினையெச்சத்தா னிருத்தற்பால தன்றோ
வெனின் ஆசிரியர்க்கத்திருவடிக்கண்ணேயுள்ள பிரியத் தொடர்ச்சியின்
பெருமை தோன்ற விங்ஙனம் நின்று அங்ஙனங் குறித்ததென்க. இதற்கு
இவ்வாறன்றித் தலைமேற் பாவனையான் வைத்தெனக் குறித்ததென்று கூறு
வாருமுளராலோ வெனின், அவ்வாறு கூறிற் பிள்ளையாரிந் நூலாசிரியர்க்கு
ஞானாசாரியரென்பது மிவர் ஞானதீக்கை யுடையாரென்பதும் விளங்குத

லின்றி மற்றையாசிரியர்போ லெடுத்த நூலினிது முடிதற்பொருட்டுப்
பாவனையான் வழிபடு கடவுட்பழிச்சினறென் றிலேசிற்கருதப்படுமாகலி
னங்ஙனங் கூறல்மரபன்றென்க. தலையில்வைத்து என்னாது தலைமேல்
வைத்து என்றமையான் மறை முடிக்கண்ணே வயங்காநின்ற வச்செல்வத்
திருவடியின் சீர்மை தோன்றிற்றென்க.

ஓர்ந்து என்பதில் ஓர் என்னும் பிறவினை முதனிலை, அறிவு தனக்கெதி
ரிட்ட வுணர்ச்சிப்பொருட்கண்ணெதிரிடுவதுபோன் றெதிரிடாதுள்ளாழ்
ந்த வப்பொருட்டிற னெதிரிடப் பெயரும் புடைபெயர்ச்சியு மெதிரிட்ட
பின்னர் விகற்பியா தெதிர்க்குந்தோறு மெதிரிடப் பெயரும் புடைபெயர்ச்சி
யுங் கோடலிற் கருவித்திறனுந் தன்றிறனும் அருட்டிறனும் உற்றுணர்ந்தவ்
வுணர்ச்சி விகற்பியாது தேறி நின்றமையைக் குறித்தது காண்க. இக்குறிப்
புத் தோன்றவன்றே திருவள்ளுவநாயனாரும், "ஓர்த்துள்ள முள்ள துணரி"
னென்றாரென்றறிக.

உள்ளத்தழிவி லென்பதி லுள்ளமென்பதன்பகாப்பதவியிற்றுப் பகு
பதப் பொருளினிடவாகு பெயரா யணுப் பொருட்கண் வந்த வுள்ளென்னும்
பகுதியுட்புறத்துமப்போதமெழுஞ் சிற்றசைவும் பேரசைவுங் குறித்தது
காண்க.

உள்ளமென்பது வாதனையானுள் ளெழும்போதத்திற் காகுபெயராயது.
வள்ளலென்பதுபோன் றொழுகிசையாய்வர வுள்ளவழிவி லென்னாது
பொறுத்திசையாய் வர உள்ளத்தழிவி லென்றதென்கொலோ வெனின்,
வேற்றுமைவழியாகலினும் போதவசைவு சார்பின்றி யமையாமை குறிக்க
வேண்டுமாகலினும் சாரியையோடு புணர்த்தியங்ஙனங் கூறியதென்க.
அழிவு என்பதில் அழியென்னும் பொது வினைப்பகுதி முன்னர்த்தோன்ற
நிகழ்ச்சிப் பின்னரோர் காலத்து மோரிடத்துமின்றிக் கெடுதற் பெயர்ச்சிக்
கண் வந்ததாகலி னப்போத நிகழ்ச்சி பின்னரெக்காலத்தும் உட்புற மென்னு
மெவ்விடத்துந் தோன்ற நிகழ்ச்சியின்றி யொடுங்கியவாறு குறித்ததென்
றுணர்க. இங்ஙனமன்றி உள்ளத்தழிவி லென்பதற்கு மனத்தினசைவற்ற
விடத்தெனப் பொருள் கூறுவாரு முளரானோவெனின், மனத்தினசைவு
போதவசைவற்றிற்றானே யறுமாகலினு மஃதறாதவிடத்திஃதெவ்வாற்றானுமறா
தாகலினும் அது பொருந்தாதென்க. இதனை ஆசிரியர் "கூறியபற்றாதபோதும்
பதறு"மென்னுந் திருவெண்பாவாற் காண்க வென்க.

அடுக்குந்தேனென்பதி லடுக்கு மென்பது அடுத்தலென்னுந் தொழிற்
பெயர்க்கட் டல் விகுதி தன்னொற்றுச் சந்தியொடு நீங்க வெதிர்காலப் பெய
ரெச்சவிடை நிலையும்மை ககரமெய்ச்சாரியை யூர்ந்து தன்னொற்றுச் சந்தி
பெற்றாண்டு நிறையுமிடப்பாடு தோற்றாது செறிதற் பெயர்ச்சியும் அடுக்க
லென்னுந் தொழிற்பெயர்க் கண் ணல்விகுதி நீங்க வவ்வெதிர்காலப் பெய

ரெச்சவிடை நிலையும்மை விகுதி நீங்க நின்று தன் வரவுகண்டோடிய குற்றுகர மூர்ந்த மெய்க்கண்ணேறி நின்று இறையும்மிடைப்போதின்மை படாது பன்முறை மேன்மேலுறுதற் பெயர்ச்சியும் பொருளாகக் கொண்டிருவகைப் பகுதி யொருவகை யெச்சமாக நிற்றலின் சிறிது மிடத்தானுங்காலத்தானும் பிரிவுதோன்றாது செறிந்து பன்முறை மேன்மேலெழுமாநந்தத் தேனென்று குறித்த தென்றுணர்க.

உள்ளத்தழிவிலடுப்பது ஆநந்தமாகலிற் றேனென்பதை யுவமைக் குறிப்பாற் சிவானந்தத்தேனென்ற தென்றுணர்க.

தேனுண்ட வண்டசைவின்றி யத்தேன் மயமாயிருத்தல் போல ஆநந்தாநுபவத்தர் போதவசைவின்றி யிவ்வாநந்தமயமா யிருத்தனுவமையாகக் குறிக்கப்பட்ட தென்றுணர்க', இதனை யொப்புறைக் கூட்டமொட்டாதிகளாகக் கூறுவாரு முளராலோ வெனினவ்வாறு கூறினும் பொருள் சிதையாமையினொருவாறமையு மென்க. போத வசைவின்கட் டோற்றல் விடயாநந்த மாகலிற் போத வொழிவின் கட்டோற்றல் சிவாநந்த மெனக்குறித்தற்குள்ளத்தழிவிலடுக்குந் தேனென்ற தென்றுணர்க. எங்ஙனமெனின் உள்ளத்தழியாமையி னடாத்தேன் என்றெதிர் மறுக்கப்படுதலினென்க. மதுரம்பற்றித் தேனையாநந்தத்திற் குவமை கூறுவாரு முளராலோவெனின், அது நாவிடயமா யிறைப்போதுநிற்றலி னித்துணைச் சிறப்பின்றென்க.

அன்பரெலா முண்ண வென்பதில் அன்பர் என்பது பொருள் புகழ் ஆதியைக் குறித்துப்பயில்வோரைநீக்கிச் சிவானந்த மெந்நாளடைவது மென்றிடைவிடாததனையே விரும்பிப்பயில்வோரைக் குறித்ததென்றுணர்க. எலா மென்பது சரியையாதி கன்ம மார்க்கங்களைக் கூறும் பிறநூல்களெல்லாம் பருவநோக்காது சாதி சமயாசார விகற்பங்களை நோக்கிச் சிலரை நீக்கியுஞ் சிலரை நிறுவியு மதிகரித்தல்போகாது அச்சாதி சமாதிகளுளுயர்ந்தோர் தாழ்ந்தோரியாரேனும் பருவத்தராயி னிந்நூற்குரிய ராவரென்பது குறித்த தென்றுணர்க.

உட்கொள வென்னும் பொருளுட்கொண்டு பொருட்டுப் பொருளிற் போந்த உண்ண வென்னும் வினையெச்சம் ஆநந்தாநுபவத்திற்கு விடாத விலக்கணையாயிற் றென்றுணர்க. என்னையெனில், உண்ணலிற் பசிநீங்கல் போல் ஆநந்தாநுபவத்திற் பசுத்துவநீங்கலினென்க. பயன் காரணம் பற்றி வந்த வொழிவிலொடுக்க நூலென்பது ஒழிவிலொடுக்க மென்னு நூல் ஒழிவிலொடுக்கந்தரு நூலென விருவழிக்கும் பொதுவாய சந்தியான் வந்தமையிற்றன்னை வேதாந்தத்திற்குஞ் சித்தாந்தத்திற்கும் பொது வென்று குறித்த தென்றுணர்க.

ஒழிவிலொடுக்க நூலுரைத்தா னென்பதில் வேற்றுமை சாரியை யுருபு
முதலிய வொன்றும் விரியாது நிற்றலின், ஞாநாசாரமன்றிக் கருமாசார
மொன்றும் விரியாத விந்நூலி னின்மலத்தன்மை தோன்றிற்றென்றுணர்க.
உரைத்தானென்பது ஒருவர் மதிநுட்பத்தால்தாம் கண்டறிந்த மாற்றுயர்
ந்த பொன்னின்றன்மையைப் பிறரு மறிந்து பயன் கோடற்குக் கட்டளைக்
கல்லினுரைத்துக் காட்டல்போற் சுருதி குருவனுபவத்தாற் றாமநுபவித்
தறிந்த சிவாநந்தப் பேற்றின் றன்மையைப் பக்குவருமறிந்து பயன் கோ
டற்பொருட்டு நூற்கணுரைத்துக் காட்டினாரென்று குறிப்புறுத்திற் றென்
றுணர்க.

என்னெனி னுரையென்பது பொன்னுரையும் பொருளாகக் கோடலி
னென்க. உரைத்தான் என்னும் பயனிலை செயப்படுபொருளி னிறுதியினி
லையாது செயப்படு பொருட்குங் கருவிப்பொருட்குமேற் "றாடலை மேல்
வைத்து" என்பதனிறுதியிற்றொடர்ந்து நின்றதென்னெனிற் சிவஞான தீக்
கையுடையரா யுரைத்தாரென்பது மன்றித் தமதாசாரியர் திருவடி சான்றா
கத்தாங் கண்ட வநுபவத்தை விளங்க வுரைத்தாரென்பதுங் குறித்தற்கெ
ன்க. என்னை ?

தாடலை மேல் வைத்து எனவே சான்றாக வைத்து என்பது தானே
யமையுமாகலின், தலைமேல் வைத்து என்பதன்பின்னிற்கக்கடவதாய
ஓர்ந்து என்பது செயப்படு பொருட்பினிறுதி நிலைபாய் நின்றதென்னனெ
னின், இந்நூல் கற்றோர்க்குக் கருமங்குறைந்து ஞான மேலிடுதலுண்மை
குறித்தற்கென்க. எங்ஙனமெனின், அவ்வோர்ந்து என்பது வினைக்குறை
யாகலினென்க. உள்ளத்தழிவிலடுக்குந் தேனை யன்பரெலா முண்ண வொ
ழிவிலொடுக்க நூலோர்ந் துரைத்தான் எனக்கொண்டு போத வொழிவின்
கண் ணடுப்பதாய வாநந்தத்தை யன்பரெல்லா மநுபவிக்கும் பொருட்டு
வேதாகம முடிபான ஞானநெறியை யாராய்ந்து ஒழிவிலொடுக்க மென்
றோர் நூலை யுரைத்தார் எனப்பொருள் கூறுவாருமுளர். அங்ஙனங்கூறின்
ஆசிரியர் பரஞான முடையாரென்பது தோற்றாது, அபரஞான முடைய
ராகப் பொருள்படுமாகலினும் அபரஞானத்தாற் கூறப்பட்ட நூல் மிகச்
சிறவாமையானு மதுபொருந்தாதென்க.

இந்நூலியற்றற்கேற்ற நற்பொருளுடைமையுஞ் சிறப்புப்பாயிர விலக்
கணத்து ளாக்கியோன் பெயரே யென முதனிறுத்தப்பட்ட நிமித்த கார
ணச் சிறப்புடைமையும் இச்செய்யுண் முடிபுக்கெழுவாயாந் தலைமையுடை
மையும் பற்றி வள்ளலென முதனிறுத்தியதென்க. இந்நூலாசிரியர்க்
காசாரியரிவரென்பது தோன்றற்கு அவ்வள்ள லென்பதன்புடை குருராய
னென்பதை நிறுத்தியதென்க. இங்ஙனம் ஆசாரிய ரென்பவர் பிள்ளையா
ரென்பது தோன்றற்கு ஞானசம்பந்தனென வைத்தல் வேண்டுமாகலின்

அந்த ஞானத்தைக் குறிக்கும் பாசவெற்றியாய வாதுவென்ற வென்பது முன் கூட்டிச்சம்பந்தனென வதன்புடை நிறுத்திய தென்க.

இரண்டாமடிக்கட் பிள்ளையார் தாள்கணிறுத்தத் தொடங்கி முன்னர் அத்தாள்களினியற்கை யருளென்று குறிக்க வள்ளலென்றும், அதன் வடிவ மாநந்த மென்று குறிக்க மலரென்றும், முறையே வைத்து வள்ளன் மலர்த் தாளென நிறுத்திய தென்க. தாள்களன்றியும், பிள்ளையாரும் அருளியற் கையரே யென்பது குறிக்கச் சம்பந்தனென்னுஞ் சந்தந்தோற்றிய வுடன் வள்ளற்சத்தந்தோன்ற நிறுத்திய தென்க. இங்ஙனம் நிறுத்தியவை சொற் பொருண் முறைநிலை. தாளென்பதற்குந் தலையென்பதற்கு முள்ள சொற் பொருட் சம்பந்த வின்பம் பற்றித் தாடலை யென்றும், தலை யென்பதற்கும் மேலென்பதற்கு முள்ள உரிமை நோக்கம்பற்றித் தலைமேலென்றும், மேலெ ன்னு மிடப்பொருட்டு வைத்தற்றொழில் சிறந்தது பற்றி மேல் வைத்து என்றும் வைத்து என்பதற்கும் உரைத்தானென்பதற்குமுரிய இறுதியும் முதலு மினமாதல் பற்றி வைத்துரைத்தான் என்றும் முறையே நிறுத்திய தென்க. இங்ஙனம் நிறுத்தியவை சொன்முறை நிலையும் சொற்பொருண் முறை நிலையுமாம்.

இங்ஙனம் முற்று முறைநிலை கூறப்புகின் மிகப்பெருகுமாகலி னொரு வாறு காட்டினம்; மற்றையவு மிவைகொண்டுணர்க வென்க. இச்செய்யுட் பொருள் ஆசிரியரதருளறிவின் மாட்சிமையை வெளிப்படையானுங் குறிப் பானும் விளங்க விரித்தலின், வாகைத்திணையுட் சால்புமுல்லைப் பொருளின் பாற்பட்ட தென்க. என்னை? சால்புமுல்லைப் பொருள், "வான்றோயு மலையன்ன சான்றோர்தஞ் சால்புரைத்தன்று" என்பவாகலின் இச்செய் யுள் தன்னுட்செயப்படு பொருளாய் நின்ற நூற்சிறப்பைத் தன்னானுந் தன்னுருப் புக்களானுங் குறிப்பாற்குறித்து நின்ற நன்னோக்குடைச் செய் யுஞ் செய்யுளென்றுணர்க. அங்ஙனம் குறித்தவை யெங்ஙனமெனின் :—

இச்செய்யுள்தான் கலிப்பா வஞ்சிப்பா ஆசிரியப்பா வென்னு முப்பா வினுஞ் சிறந்த வெண்பாவாகலி னிக்குறிப்பால் இந்நூல் சரியைநூல் கிரி யைநூல் யோகநூல் என்னு முந்நூலினுஞ் சிறந்த ஞானநூலென்று குறி த்ததென்க. தான் ஈரசையானுசிட்டிருவகைத் தளைதழீஇ யொழுகிசைச் செப்பலோசை யான் வந்ததாகலி னிக்குறிப்பா லிந்நூல் ஆகமமுடிவும் வேதமுடிவுங்கூறு மிருவகை நெறியுமொருவகை நெறியாத் தழீஇக் கொண் டிருந்தமை குறித்ததென்க.

தான் ஒன்றடுத்த விரட்டை முப்பத்தாறெழுத்துக்களைக் கொண்டு நிற்றலினிக்குறிப்பானிந்நூல் பாசமொன்றடுத்த தத்துவ முப்பத்தாறென்று மம்முப்பத்தாறன். றன்மை யிவையென்று பகுத்தறிதல் வகையுமுணர்த் துவதெனக் குறித்ததென்க. தான் நான் கடுத்த முப்பத்தாறசைகளை யசை

த்து நிற்றலினிக் குறிப்பானிந்நூல் அத்தத்துவ முப்பத்தாறனையு நிபதிகளைதன் முறையை யுணர்த்துவதெனக்குறித்ததென்க. அஃதேன் முப்பத்தாறன்மே ளுன்கடுத்ததென்னெனின், ஆன்ம தத்துவத்தின்வன்மை தோன்றற் கோரசையும் வித்தியாதத்துவத்தின் வலிதோன்றற் கோரசையும், நாதத்துவத்தின் பெருமை தோன்றற்கிரசையு மிருந்தனவென்க. தான் பதினைந்துசீர் சீர்கொளநிற்றலி னிக்குறிப்பா னிந்நூல் ஆசாரியத்தன்மை சீடத்தன்மை பதித்தன்மை பசுத்தன்மை பாசத்தன்மை உபதேசத் தன்மை பக்குவத்தன்மை யோக நிவிர்த்தி கிரியை நிவர்த்தி சரியை நிவிர்த்தி விரக்தி விளக்கந் துறவுத்தன்மை யருளவத்தைத் தன்மை வாதனை மாண்டார் தன்மை நிலையிபல்பு என்னு மிப்பதினைந்தினையுஞ் சீர்பெறக் கொண்ட தெனக் குறித்ததென்க.

தானெழுவகைத் தளையினியைந்ததாகலி னிக்குறிப்பா னிந்நூல் ஆன்ம தரிசனம் அருட்டரிசனம் பராதரிசனம் பராயோகம் பராமோசநீக்கம் போதவொழிவு இன்பப்பேறு என்னும் எழுவகை நிலையு மறிவிப்பதெனக் குறித்ததென்க. தான் தனிச்சொல் பெற்று நான் கடியுட னடந்ததாகலினிக் குறிப்பா னிந்நூல் கூறுமொப்பற்ற ஞானமும் சுத்தச்சரியை சுத்தக்கிரியை சுத்தயோகம் சுத்தஞானம் என நான்குபாதத்தோடு நடப்பதெனக் குறித்ததென்க. தான் ஒரூஉத்தொடையொடு முத்தொடைபானியன்றதாகலி னிக்குறிப்பா னிந்நூற்சுருதி குரு அநுபவமென்னு மூன்று மொத்தியன்றதெனக்குறித்த தென்க.

அல்லதூஉம் இச்செய்யுளடி நேரடியாய் விதித்தவெழுத் தெல்லையி னிகவாது நிற்றலி னிக்குறிப்பா னிந்நூல் மெய்வீட்டி னெறித்தா யவ்வீட்டினெறிக் கெல்லையாய ஞானத்தினிகவாது நின்றதெனினுமா மென்க. எல்லை என்னெனிற் * "பத்தெழுத்தென்ப நேரடிக்களவே-யொத்தநாலெழுத் தொற்றலங் கடையே" யென்பவென்க. இங்ஙனங் குறித்தற்கன்றே இச்செய்யுளீற்றடியி னூற்பெயரை வேறடைகொடாது தனிமையினிறுத்திய தென்க.

இச்செய்யுள் சிறப்புப் பாயிரத்ததாயின் அப்பாயிரத்திலக்கண மிதனுளிருந்தவா றெங்ஙனமென்னின் வள்ளலென்பதனால் **ஆசிரியர்பெயரும்**; குருராயன்வாது வென்ற சம்பந்தன் வள்ளன்மலர்த்தாடலைமேல் வைத்துரைத்தா னென்பதனுன் ஞானசாரியாராகிய பிள்ளையா ரருளுபதேச வழித்தெனவுட்கொளப்படுதலின் **வழியும்**, இந்நூற்றொடர் தமிழ்த் தொடராகலி னித்தமிழ் வழங்கு நிலமேயிந்நூல் வழங்கு நிலமெனக் கருதப்படுதலின் **எல்லையும்**, ஒழிவிலொடுக்கநூ லென்பதனால் **நூற்பெயரும்**, ஒழிவிலொடுக்கமென அன்மொழித் தொகைப் பெயர் மாத்திரையினில்லாது நூலெனவிரித்தமையினிந்நூலுந் தொகை விரியுடையதெனக் கருதப்படுதலின் **யாப்பும்**,

* தொல்காப்பியம்; செய்யுளியல்-சூத்திரம் 38.

உள்ளத்தழிவி லென்பதனாற் கருதிய பொருளும், அன்பரெலா முண்ண வென்பதினால் அன்பரெலா முணற்பொருட்டிஃதியற்றாக வென்றுள்ளெழுந் தெதிரிட்டு நின்றது ஆசிரியரது பெருங்கருணை யெனக்கருதப்படுதலிற் கேட்போரும், உள்ளத்தழிவிலடுக்குந் தேனென்பதனாற் பயனும் புலப்படு மாகலின் அவை யிருந்தவா றிங்ஙனமென்க.

(சிறப்புப்பாயிரவுரை முற்றிற்று.)

---

## திருவிளையாடற் கருப்பொருள்.

---

### உக்கிர குமாரனுக்கு வேல்வளை செண்டு கொடுத்த படலம்.

12. வேலைமக வான்மேரு வேல்வளைசெண் டால்வெல்ல
வேலையுடை யாற்களித்து விண்ணுற்றான்—சேலலைகட்
காந்திமதித் தாய்க்குங் கவின்மதுரை யுக்கிரற்கு
மேய்ந்தமணந் தண்டா னினிது. (உரு)

### கடல் சுவற வேல்விட்ட படலம்.

13. போகியமைத் தேவப் புனற்கரசன் றென்மதுரைப்
போகி யொலிக்கப் பொருவழுதி—யேகியவிர்
வேலாற் கடல்சுவற வேசெய்து வீழ்ந்தெழுந்தா
னாலால முண்டா னடி.

### இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலம்.

14. முத்தமிழோ னல்விண்சென் மூவிறையு ளிந்திரனின்
கொத்தவிழ்தார் தாங்கிக் குயினான்கை—வித்தகனு
மிட்டான் சிறையிலெதி ரிந்திரன்றன் மேல்வளையை
விட்டான் மழைபெற்றான் வென்று.

### மேருவைச் செண்டாலடித்த படலம்.

15. பஞ்சத்தாற் பஞ்சவனும் பாண்டரங்கன் சொற்படியே
யஞ்செண்டான் மேருவினை யன்றடித்து—விஞ்சுதனம்
பெற்றான் மகவீன்றான் பேழ்மதுரை நம்பனடி
யுற்றா னரசாண் டுவந்து.

### வேதத்திற்குப் பொருளருளிச்செய்த படலம்.

16. மாமறையின் மெய்ப்பொருளை மன்கண் ணுவர்முதலா
மாமுனிவ ரோராது தன்புறுங்கால்—பூமதுரைத்
தற்பரனத் தூயோர்க டாமகிழத் தோன்றியுரைத்
தற்புதமா யேமறைந்தா னங்கு.

### மாணிக்கம் விற்ற படலம்.

17. வீரனறு கால்விய வீறுமுடி சூடமணி
சோரர் கொளவமைச்சர் சோர்வுறுங்காற்—சீர்மதுரை
மாதவன்வ லாரியுடன் மாணிக்கந் தந்ததன்சீ
ரோதிமறைந் தானுண்டா னுய்ந்து.

### வருணன் விட்ட கடலை வற்றச்செய்த படலம்.

18. வருணனும் மாலால் வயிற்றுவலி தீர்ப்பான்
குரவையினை யேவவது கூடற்—பெருகிவரக்
கண்டா னபிடேகன் கார்நான்கா லாலால
முண்டானுண் பித்தா னுவந்து.

### நான்மாடக் கூடலான படலம்.

19. நான்மூன்று செல்லேவ நாணிவரு ணன்மதுரை
தான்மூழ்கத் தென்னவனுந் தாபமுற—வான்முடியி
னுன்மாட நான்முகிலா னன்கமைத்தா னன்றுமு
னுன்மாடக் கூடலந்த நாடு.

### எல்லாம் வல்ல சித்தர் திருவிளையாடற் படலம்.

20. எல்லாமா யல்லவுமா யெய்துசிவன் கூடலிடை
யெல்லாமாய் வல்லசித்த னெஃறெய்தி—யெல்லாருங்
காணப் பலவாடல் காட்டினுன் மாலயற்கு
மாண வளர்ந்தான் மகிழ்ந்து.

### கல்லானைக்குக் கரும்பருத்திய படலம்.

21. இச்சித்தன் செய்கையினை யின்றறிவா மென்றவிறை
மச்சறவே நோக்கி மருளோட்டி—யச்சுறவான்
கல்லானைக் கங்கு கரும்பருத்தி னுன்மதுரை
யல்லாருங் கண்டத் தரன்.

### யானையெய்த படலம்.

22. மால்பணியாற் சாவகர்செய் மாவேள்வி தோன்றியமா
மால்பனிக்கக் கூடன் மருவுதலும்—வேல்வழுதி
சிந்தா குலமுற்றுன் சேவகனுய்ச் சென்றழித்தா
னிந்தார் சடிலத் திறை.

### விருத்தகுமார பாலரான படலம்.

23. மாதவன் வைணவத்து மாணிக்குக் கௌரியினை
வேத விதிப்படியே வேட்பிக்க—நீதமிலாச்
சுற்றத்தார் மெய்ச்சிடமூத் தோன்குமரன் சேயானுன்
பெற்றத்தான் கூடற் பிரான்.

மாறி யாடின படலம்.

24. செய்ய பரதந் தெரிராஜ சேகரனம்
மைய னடங்கண் டகங்குழைந்து—மையணிந்த
வத்தனே கான்மாறி யாடுமென வாடினன்
சித்தனுங் கூடற் சிவன்.

(இன்னும் வரும்.)

ஏ. சங்கரலிங்கம் பிள்ளை.

---

## திருவிடைமருதூர்க் கலம்பகம்.

---

### ஆசிரியவணக்கம்.

உலகிலொளிர் கலைக்கடன்முற் றுண்டுமன விருளகல வோங்கி மின்னி
யலகில்பல கவிஞர்வெருஉக் கொள்ளவதிர்த் தார்ப்பரித்தே யளிய னேன்றன்
சுலவறிவுத் தடங்ரம்ப மனப்பறம்பிற் றூயதமிழ்ச் சோனை தூவுங்
குலவுபுகழ்ச் சூரிய நாரணமுகிறன் குரைசழலுட் கொண்டு வாழ்வாம்.

கடலாடை யுடுத்த நிலமகடன் எழின் முகமென இலங்கும் இடைமருதூரெம்மான்றன் றருளில் அணிபெறச் சார்த்திய இக்கலம்பகமாங்கவி மாலையை யியற்றியவர் திருவெவ்வுளூர் இராமசாமி செட்டியார் என்பவர். இவர், திருத்தணிகைக் கந்தசாமி ஐயரிடம் இலக்கண இலக்கியங்களை ஐயந்திரிபற வோதியுணர்ந்தவர். இவர், பற்பல தலங்களிலுந் திருக்கோயில் கொண்டெழுந் தருளியிருக்குங் கடவுளர்மீது பற்பல பதிகங்கள் பாடியுள்ளார். பண்டிதர் பலரும் பெரிதும் பாராட்டத் தகுவதொரு நூலாமிக்கலம்பகத்தை யாராய்வான் புக்க வெம்மைக் கண்டுளவரு மெள்ளாதருள் புரிவாராக, ஆசைபற்றியறைய லுற்றே னாதலின்.

மருதமர மொன்றினைத் தன்னிடைத் தலவிருக்கமாக வமையப் பெற்று விளங்குந் தன்மையால் இந்நகர் இடை மருதூர் எனும் பெயர்த்தாயிற்று இதனை,

"பேசு மம்மரு தலர்கடுப்ப் பினைறகொள்வே ணியனைப்
பூசை செய்துதன் பெயர்முத லிடைகளாற் புறஞ்சூழ்
கேச ரங்களை வருவியாக் கிளர்முத லீறு
வீசி நல்லிசை பயில்விக்கும் விமலனு மகிழ."

என்னுஞ் செய்யுளா னுணர்க.

கலம்பகமாவது—ஒரு போகும் வெண்பாவும் கட்டளைக் கலித்துறையும் முதற் கவியுறுப்பாக முதற் கண் அமைத்துப் புயவகுப்பு, மதங்கு, அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல், என்னும் ஈரொன்பா னுறுப்புகளும், காலத்தான் மரீஇய இடைச்சியார், பிச்சியார், வலைச்சியார், கொற்றியார், கிரையார், பள், கிளிப்பயிற்று, சல்லாபம் முதலியனவும் இயையுமாறு மருட்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், கலித்தாழிசை, கலி நிலைத்துறை, வஞ்சி விருத்தம், வஞ்சித்துறை ஆசிரியத்துறை, வெண்டுறை முதலிய செய்யுள் விகற்பங்களை யுடையதாய் இடையிடையே வெண்பாவும் கட்டளைக் கலித்துறையும் விரவிவர யமகம், திரிபு, வண்ணம், சந்தம் முதலியனவும் பொருந்த அந்தாதித் தொடையால் முற்றுற இறுதியும் முதலும் மண்டலித்து அணிநயஞ் செறியப் பாடப்படுவதொரு பிரபந்தமாம். இதனைப் பாடுங்கால் தேவர்க்கு நூறும், அந்தணர்க்குத் தொண்ணூற்றைந்தும், அரசர்க்குத் தொண்ணூறும், அமைச்சர்க்கு எழுபதும், வணிகர்க்கு ஐம்பதும் வேளாளர்க்கு முப்பஃதுமா மொழிதல் வழக்கென வரைகுப வான்றோர். கலம்பக விலக்கணத்தை **இலக்கணவிளக்கம் வச்சணந்தி மாலை பன்னிரு பாட்டியல்** முதலிய நூல்களிற் காண்க. ஆசிரியர் தொல்காப்பியனார் தமது செய்யுளியலில் "விருந்தே தானும், புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" என்று கூறினமையானும், உரையாசிரியர் நச்சினார்க்கினியார் 'விருந்து தானும் பழங்கதை மேலதன்றிப் புதிதாகத் தாம் வேண்டியவாற்றாற் பல செய்யுளுந் தொடர்ந்து வரத் தொடுக்கப் படுந் தொடர்நிலை மேலது' என்று உரை கூறினமையானும் இக்கலம்பகமென்னும் பிரபந்தம் எண்வகைவனப் பினுளொன்றாய்ப் புதுவது புனையுந் தொடர்நிலை மேலதாம் விருந்து என்பதனியலுடைத்தாத லுய்த்துணர்க. இதனைச் சிறுகாப்பியத்து ளடக்குவாரு முளர். அங்ஙனமடக்குதல் பொருந்தாதென்ப தெம்மனோர் துணிபு. "நந்தலிலா நால்வகைச்சொன் மலர்பரப்பி நறைபிலிற்றி யணிமிக் கோங்கக், கந்தமுறுங் கலம்பகப் பாமாலை" என்று கூறியதற் கேற்பப் பல்வகையான நறுமலர்களால் யாக்கப்பெற்ற வொரு பூமாலைபோல் இன்சுவை பொதுளிய பலவிதப் பாக்களாற் புனையப் பெற்றதொரு நூலாமாதலின் இப்பெயர் 'கதம்பகம்' என்றும் வடசொல்லின் சிதைவெனக் கோடல் தகுதியே. இனிக் (கலப்பு + அகம்) எனப்பிரித்து மெலித்தல் விகாரம்பெற்றதாகக் குறித்துப் பற்பல வுறுப்புக்களையுந் துறைகளையுங் கலப்பாகத் தன்னகத்தேயுடையதெனக் கூறுதலுமொன்று இன்னும் ஒரு சாரார் பன்னிரண்டு மரக்கால் என்னும் பொருள்படும் 'கலம்' என்னுஞ் சொல்லும், கடவுளது ஆறு குணங்களை யுணர்த்தும் 'பகம்' என்னுஞ் சொல்லுங் குறிப்பினானே பன்னிரண்டு ஆறு என்னுந் தொகைகளை மாத்திரந் தெரித்து, உம்மைத்தொகையாய்ச் சேர்ந்து ஈரொன்

பான் உறுப்பினையுடைய தொருபிரபந்தத்தினைக் காரணக் குறியாயுணர்த்திற் றெனக் கூறுப.

இனி யிந்நூலைப்பற்றிக் கூறப்புகுவாம். சாசாங்கிநாடகத்தையியற்றிய சலசலோசனச் செட்டியார் என்னுந் தவப்புதல்வன் இளவயதின் மரித்த ஞான்று, புத்திர சோக மேலீட்டான் உலகவாழ்க்கையில் வெறுப்புற்ற தந்தையாராகிய திரு இராமசாமி செட்டியார், எல்லாம் வல்லமுழுமுதற் கடவுளைப் பாடலே தமக்குப் பொழுது போக்காகவும், மனத்துயராற்று மருந்தாகவுங் கொண்டு இடை மருத நகரில் தாம் வசிக்குங்கால் இக்கலம்பகத்தைப்பாடியருளினமையை யுணர்ந்தோர் யாவரும், இந்நூல் பத்திரஸ முதிர்ச்சிவாய்ந்துள தென்பதை யாங் கூறுமலே தெள்ளிதி னுணர்கிற்பார்.

நூற்பாயிரத்திற் சமயாசாரியர் நால்வரைத் துதிக்குங்கால், அன்னோரைப் 'பிள்ளை', 'பெரியர்', 'பிரியர்', 'அடிகள்', என்று கூறினமையின், ஒரு பிரபுவினிடம் அருள் பெறவேண்டி யாங்கொருவன் அவர் தம் புதல்வனைக் கொண்டாயினும், அவரைத் தெரிந்த பெரியாரைக் கொண்டாயினும் அவர் தம் நண்பினரைக் கொண்டாயினும், அன்றேல் அவர் தம் ஆசிரியரைக் கொண்டாயினுங் காரியசித்தி யடையும் உலக வழக்கினை இந்நூலாசிரியர் இனி துணர்ந்தவராந் தன்மை வெளிதில் விளங்கும். களிற்றினைக் களிறுகொண்டு கைப்பற்றுமாபோல் ஒருவனைக் கைவசப்படுத்த விரும்பின் அவனது தன்மை பெற்ற இனத்தாரைக் கொண்டே யங்ஙனஞ் செய்தல் எளிதா மாதலின், 'பெண்ணிடத்தஞ்' றன் அருள் பெறப் 'பெண்ணினது சம்பந்தத்தை யோரோவோர் விதமாவுடைய விந்நால்வரையும் வணங்கினமைமிகவுமேற்புடைத்தாம்.

இடைமருதூ ரெம்மான் மேற்பாமாலை புனைவான் புகுந்த விவர், தமக்குமுன்னரே மும்மணிக் கோவையினைப் பெம்மாற்குச் சார்த்தியவரும், தம்மைப்போல் 'பட்டினத்தார்' என்ற பெயர் வாய்க்கப் பெற்றவரும், * வணிக குலத்தி லுதித்தமையாற் றமக்கினத்தாருமாகிய பட்டினத்தடிகளைத் துதித்தமை பெரிதுஞ் சால்புடைத்தாமாறு காண்க. அன்னாரியற்றிய மும்மணிக் கோவையின்மீதுள்ள ஆர்வமேலீட்டினைத் தெரிப்பான் அதனை "மலைத்தே னேநன், மணிக்கோவை யுனுஞ்சுரபி யின்பாலோவீதெனமா மதுரச் சொன்மும், மணிக்கோவை யெனும்வளங்கொள் பிரபந்தம்" என்று சிறப்பித்துக்கூறியமையே யாம் மேற்குறித்ததற்குத் தக்க சான்று பகரும்.

முன்னர்ப் பட்டினத் தடிகளைக் கள்வனென மருண்ட பத்திரகிரி மகாராஜா அவரைக் கழுவேற்றத் துணிந்த போழ்தத்து, அவர் கழுமரத்தை நோக்கி

---

*பட்டினத்துப்பிள்ளையார் வணிக குலத்தினரல்லரென்றும் வேளாள குலத் தவதரித்தவரென்றும் சொல்லுப பலர். ப-ர்.

"என்செய லாவதி யாதொன்று மில்லை யினித்தெய்வமே
யுன்செய லேயென் றுணரப்பெற் றேனிந்த வூனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்று மில்லை பிறப்பதற்கு
முன்செய்த தீவினையோ விங்ஙனே வந்து மூண்டதுவே"

என்னும் பாடலை யிசைத்த வளவிற் கழுமர மெரிந்து வீழ்ந்த அற்புதச் செய்கையினை வியந்து,

"இயலாதி முத்தமிழ்தேர்ந் தேத்துவெண்கா டர்க்காச்
செயிரார் கழுவெரியச் செய்தாய்" என்று கூறினமையானும்,

வெண்காடர்தம் பரிகலச் சேடத்தைப் பத்திரகிரியா ரிடவுண்ட வொரு பெண்ணுப் அந்நல்வினையாற் காசியபராயன் மட மகளா யுதித்துப் பின்னர் இடைமருதில் யோகு செய்து வதிந்த பத்திரகிரியாரை யண்மி அவருடன் சிவச் சோதியிற் கலந்த தன்மையினை யுலகினர் இனிதறிவான்;

"நாயுதித்த பெண்ணின் நவைதீர்த்துப் பேறளித்த
வேயுதித்த முத்தே" யென்று புகழ்ந்தமையானும் பட்டினத்தடிகள்மே லிந்நூலுடையார்க்கு உண்டாகும் ஆர்வ மிகுதியினை யாவரே குணிக்கற்பாலர்? அதான்றியும் இவர் தமது நூலில் அவ்வடிகளைப்பற்பல விடங்களிலும் பின்பற்றி யுள்ளார். உதாரணமாகப் பட்டினத்தடிகள் தமது கோயில் நான்மணி மாலையில்.

"வெண்ணெ யுண்ண வெண்ணுபு வந்து
நந்தா விளக்கை நந்துபு பெயர்த்த
தாவுபல் லெலிக்கு மூவுல காள
ரொய்தி லளித்த கைவளம் போற்றி"

என்று கூறியாங்கு இந்நூலுடையாரும்.

"தடையற வெலியொரு தனியர சுறவருள்
கொடையினி லிசைபெறு குணமுள மகிமையை"

என்று தங் கலம்பகத்திலுரைத்துளர்.

இவர்தம் ஆசிரியராய கந்தசாமி ஐயரது மூதாதையர் உரைத்த கையுலாவின்கண்,

"சிந்தா மணியாஞ் சிலப்பதிகா ரம்படைத்தான்
கந்தா மணிமே கலைபுனைந்தான்—நந்தா
வளையா பதிதருவான் வாசவனுக் கீந்தான்
றிளையாத குண்டலகே சிக்கும்" என்று பெருங்காவியங்களைந்

தின்பெயரும் வெவ்வேறு பொருடருமாறு ஒருங்கே யமைக்கப் பெற்றவா போல், இவரும் நற்று யிரங்கற் றுறையாகிய "வளங்குலவு" மென்னுந் தொடக்கத்த செய்யுட்கண் அமைத்தவாற்றால் இவர் தம் ஆசிரியர் பரம்பரையின் மாட்டு இவர்க்குள அன்பின் மிகுதியும் அவரைப் பின்பற்றிய திறனுஞ் செவ்வனே விளங்குகின்றன. (இன்னும் வரும்.)

ந. பலராம ஐயர்.

---

## கல்லாட வாராய்ச்சி.

---

சிவலோகமென வற்புறுத்திக் கூறப்பட்ட பாண்டி நாட்டில் எம்மொழிக்கும் பின்னிடாத தமிழ்மொழி தொன்றுதொட்டு மூன்று சங்கங்களில் வீறு பெற்று வளர்ந்தது. அவற்றுட் கடையது சற்றேறக்குறைய கி. மு. 1750-ஆம்வூ தொடங்கிக் கி. பி. 100-ஆம்வூ வரையும் நடந்தது. இக்கடைச்சங்கம் முடத்திருமாறன் காலந்தொடங்கிப் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி காலம்வரை தலைழத்தது. இவ்வுக்கிரப் பெருவழுதியார் காலத்தே நாயனாரது திருக்குறள் அரங்கேற்றப்பட்டது. அப்போழ்து சங்கப்புலவர்களாய் வீற்றிருந்த கபில பரண நக்கீரராதி நாற்பத்தொன்பதின்மருட் கல்லாடர் என்பவர் ஒருவர். இக்கழகமாந்தர் பெரும்பான்மையும் சிவநேசமுடையவர்களாதலின் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருத்தொண்டத் தொகைக் கண்ணே தொகையடியாருட் 'பொய்யடிமை யில்லாத புலவர்' எனப் புனைந்துரைக்கப்பட்டனர்.

கல்லாடரது சரிதம் வரன் முறையாய்க் கிடைத்திலது. ஆயினும் இவரது குணம், கல்வித்திறன், கடவுண் மாட்டன்பு, மற்றைக் கொள்கைகள் முதலியன இவரது பாடல்களான் அங்கையின் நெல்லி யங்கனியெனத் தெற்றன விளங்கும். இவர் நக்கீர கபில பரணதியரோடுடனுறைந்தவர். நக்கீரர் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைத் தமது நெடுநல் வாடையிற் புகழ்ந்ததற்கேற்பக் கல்லாடரும் அவனது பெருமையை ஓர் அகவற்பாவாற் சிறப்பித்தார். கல்லாடரது சீர்த்தி என்றுங்குன்றாது அவர் பேரன்பின் மேலீட்டால் அருளிய கல்லாடத்தினும், கண்ணப்பதேவர் மறத்தினும் நிலைபெறும். கற்றவர்கள் அருந்துதற்கினிய கனியெனத்தகும் கல்லாடம் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் திருவாய் மலர்ந்த திருச்சிற்றம்பலக் கோவையாரைச் சங்கப்புலவருள் முரண்பட்ட நக்கீரராதியர் குற்றங் கூறியவழி அவற்றிற்கு வழுவமைதி கூறுவானியற்றப்பட்ட நூலெனச் சிலர் கொள்வர். இதனது உண்மையை நிறுவுதற்கும் அல்லாத வழி இக்கொள்கை பொய்யென மறுத்தற்கும் வலியிலம். அஃதெவ்வாறாயினு மாகுக. கல்லாடத்தின் சுவையினைச் சற்றே நுகர்வாம்

அரிய நூல்களின் பெருமை அரிய பழமொழிகளால் வெளிவருகின்றது. நாலு மிரண்டுஞ் சொல்லுக்குறுதி', 'திருவாசகத்தி லுருகான் மற்றொரு வாசகத்து முருகான்', 'கம்ப சூத்திரமோ ?' 'சிவனின்மிக்க தெய்வமு மில்லை சித்தியின் மிக்க நூலுமில்லை' யென்னும் பழமொழிகள் எவ்வாறு நாலடியார், திருக்குறள், திருவாசகம், இராமாயணம், சிவஞான சித்தி யாராதிய நூல்களது பெருமையை விளக்கலுற்றனவோ அவ்வாறே 'கல் லாடங் கற்றவனோடு மல்லாடேல்' என்னும் ஆன்றோர் வசனம் கல்லாடத் தின் அருமையைத் தெரிவிக்கும்.

கல்லாடம் பல்லாற்றானும் உயரிய பெருமை வாய்ந்த நூல். சங்கமே பொய்யென மருண்ட மனத்தாற் பிதற்றுவார் இதனையாவது ஆராய்ந்து தெளிவடைக. இந்நூலின்கட் கடைச்சங்கத்தின் சில விருத்தாந்தங்களும், சோமசுந்தரக் கடவுளது பலதிருவிளையாடல்களும்,பாரதராமாயண வரலாறு களும், கண்ணப்பர் சாரைக்கா லம்மையார் மூர்த்தி நாயனார் சாக்கியர் மார்க், கண்டர் முதலாய அன்பரின் திருத்தொண்டின் திறமும், திருமாலின் உக்கிர நரசிம்மாவதார வைபவமும், இன்னுஞ் சில விடயங்களும் கற்றவர் காமுறும் வண்ணம் செந்தமிழ் ஊற்றெடுத்துத் தேனொழுகக் கிடக்கும்.

தமிழ்மாதின் எழில்நலனை யினிது நுகரவிரும்புநர்க் கிதனினுஞ் சிறந்த வேறு நூலொன்றுமின்று. சொற்பொலிவும் பொருட் பொலிவும் எங்க ணும் மலிந்து தோன்றும். மாந்தர்க்குறுதி பயக்கும் அறம்பொருளின்பம் வீடாகிய நான்கனையும் ஒருங்கே பெறுதற் கியைந்தது. வெளித்தோற்றத் தால் அகப்பொருட் டுறைகளை விளக்கியதெனக் காணப்படினும், கடவுண் மாட்டுப்பேரன்பு படைத்தோர்க்கும் காமுகர்க்கும் கல்விப்பயனை யெய்த விரும்புவோர்க்கும் தனித்தனி அவரவர் நினைத்த வின்பத்தினைப் பயக்கவல் லது. ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளருளிய திருச்சிற்றம்பலக் கோவை யாரை அபியுக்த ரொருவர்,

> ஆரணங் காணென்ப ரந்தணர் யோகிய ராகமத்தின்
> காரணங் காணென்பர் காமுகர் காமநன் னூலதென்ப
> ரேரணங் காணென்ப ரெண்ண ரெழுத்தென்ப ரின்புலவோர்
> சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே.

என்றுரைத்த பெரும்புகழ் கல்லாடத்திற்கும் நன்குறப் பொருந்தும்.

கல்லாடத்தால் ஆசிரியரைக் குறித்து யாம் அறியக்கிடந்த வரலாறு பின்வருவதாம்:—கல்லாடர் பூதிப்பெருஞ் செல்வம் படைத்த யோகியர். வேதாகமங்கள் உடம்பாடே யாயினும் ஆகமங்களே யிவர்க்குப் பெருஞ்சிறப் பினவாம். இவரது வருண மின்னதெனத்தோன்றாவிடினும் அந்தணரல்ல ரெனத் தெரிகின்றது. ஏனெனில் அந்தணரைப் பலவிடத்தும் பெருமித

மாய்ப் புகழ்ந்திருக்கின்ற ராகலின். தாமும் அந்தணராய வழி அப்புகழ் ஒரோவழித் தற்புகழ்ச்சியாம். சிவபெருமானது இணைமலர்ப் பாதங்களி வர் மனத்தே யெப்போழ்தும் பதிக்கப்பட்டன. சிவபெருமானது கீர்த்தி யைப்பரவுந்தோறும் அடங்காப் பேருவகை மேலிட்டு அருண்மழை பொழி கின்றது. நாஸ்த்திகர்பால் வெகுண்ட மனத்தினர். அன்பர் பக்கல் தலை யன்பு படைத்தவர். உலகியல் முற்று மறிந்தவர். தமிழமிழ் தருந்திய தண் டமிழ்வாணர்.

பொதுவகையான் நாமுரைத்த சிறப்புக்களைக் கல்லாடத்தினின்றும்தக்க சாட்டுக்களாற் சிறிது விளக்குவாம்.

சடைச்சங்கத்தைப்பற்றி யிந்நூல் வாயிலாகப் பின்வருவனவற்றை யறியலாம்:—

கடைச்சங்கத்தில் ஒரே காலத்தில் வீற்றிருந்து தமிழாராய்ந்த புலவர் நாற்பத்தொன்பதின்மரே யென்பதற்குக் கல்லாடத்தினும் சிறந்த சான்று வேறிலது. இறையனார் இயற்றிய களவியலைக் குறுமுனியும் புலவர் நாற் பத்தொன்பதின்மரும் அமுதமெனப் பருகினரென்றார்.

செங்கட் பகடு தங்குவய லூரர்க்
கருமறை விதியு முலகியல் வழக்குங்
கருத்துறை பொருளும் விதிப்பட நினைந்து
வடசொன் மயக்கமும் வருவன வுணர்த்தி
யைந்திணை வழுவா தகப்பொரு ளமுதினைக்
குறுமுனி தேறவும் பெறுமுதற் புலவர்க
ளேழெழு பேருங்கோதறப் பருகவும்
புலநெறி வழக்கிற் புணருல கவர்க்கு
முற்றவம் பெருக்கு முதற்றுபதர்க்கு
நின்றறிந் துணர்த்தவுந் தமிழ்ப்பெயர் நிறுத்தவு
மெடுத்துப் பரப்பிய விமையவர் நாயகன் (65-ஆம் அகவல்)

அன்பே யுருவெடுத்த தருமியென்னும் அந்தணர் பொருட்டு ஆலவாயண் ணல்,

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீயறியும் பூவே.

என்னும் பாசுரத்தை அன்பரது மிடிதீர அருளி அதனாற் பாண்டியன் கட்டி வைத்த பொற்கிழியை அவற்குத் தந்தன ரென்பது,

கொங்குதேர் வாழ்க்கைச் செந்தமிழ் கூறிப்
பொற்குவை தருமிக் கற்புட னுதவி
யென்னுளங் குடிகொண்டிரும் பயனளிக்கும்
கள்ளவிழ்குழல் சேர்கருணை யெம்பெருமான் (1-ஆம் அகவல்.)

என்னும் அடிகளால் விளங்கும். கொங்குதேர் வாழ்க்கைப் பாசுரம் சங்கத்தார் கோத்த எட்டுத் தொகையுட் குறுந்தொகையில் மூன்றாஞ் செய்யுளாக இறையனாரை ஆசிரியராகக்கொண்டு விளங்கும்.

பின்னர் இச்செய்யுள் புலவர் குழாத்தின் முன்னிலையிற் கல்விச் செருக்கால் வீறடைந்த நக்கீரரால் வழுவுடைத்தெனப் பழிகூறப்பட்டு ஆலவாயண்ணல் புலவருருக்கொடு இறையனாராகவக்கழகத்திற் போந்தபோழ்தும் முரணுடை நெஞ்சால் நக்கீரர் அதன்கட்போலிக் குற்றங் காட்டியபொழுது அதற்குத் தக்க மறுப்புக் கருணையங்கடலாகிய பரமசிவமளிப்பவும், கேடுறுவார்க்கு மதிதேயுமென்னும் ஆன்றோர் மொழிக்கேற்பத் தமிழ் வல்லாராகிய நக்கீரர் முரண்வாதத்தால் தாம் பிடித்ததையே சாதிக்க, அவர்பால் இருவகைக்கருணையில் ஏற்புடையது மறக்கருணையேயென்று கடவுளார் கண்டு செருக்குற்றானைத் தமது அழல்விழியாற் சற்றே நோக்கலும், வாய்வன்மையும் மதிவன்மையும் மெய்வன்மையு மிழந்து நக்கீரர் பொற்றாமரைத் தடத்தின்கண் மூழ்கினர். ஏனைப்புலவர்கள் உருக்கரந்த இறையனாராகிய சோமசுந்தரக்கடவுளை நெஞ்சம் நைந்துருகி நக்கீரர்பாற் கடைக்கணிக்கப் பலவாறு பரவியபோது கடவுளதருளால் மூழ்கிய புலவர் கரையேறி ஆணவமலமொழிந்து ஆலவாயிற் பெருமானடிகளது புகழைச் செந்தமிழாற் பாடினாரென்பதற்குப் பின்வரும் பாவடிகள் தக்க சான்று பகரும்.

அருந்தமிழ்க்கீரன் பெருந்தமிழ்ப் பனுவல்
வாவியிற் கேட்ட காவியங் களத்தினன். (52-ஆம் அகவல்.)

கல்விச்செருக்கால் அருடருங்கல்வியின் மெய்ப்பயனை யெய்தாது, தற்காப்பினுக்கியைந்தவாளால் ஒருவன் தன்னையே கடிந்து கொள்வதையொப்பக் கழகமாந்தர் கல்வியின் மேம்பாட்டால் ஆணவமலஞ்செறிந்து முத்திவழி அடைபட்டு அவலக்கடலில் ஆழுந்தறுவாயில் திருவள்ளுவர் தோன்றினார்.

இத்திருவள்ளுவர் தாமியற்றிய திருக்குறளைக் கடைச்சங்கப்புலவர் முன்னிலையில் அரங்கேற்றப் புகுந்தாரென்பதூஉம், அந்நூற்குச் சிறப்புப்பாயிரம் அப்புலவர் ஒவ்வொருவராலும் கொடுக்கப்பட்ட தென்பதூஉம், அப்போழ்து இறையனார் தாமே அந்நூற்கு முதற்கவியளித்தா ரென்பதூஉம், அவர்முக்கண்படைத்த முழுமுதற் கடவுளே யென்பதூஉம், பின்வரும் பாவடிகளால் விளங்கும்.

சமய்க் கணக்கர் மதிவழி கூறு
துலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவன் றனக்கு வளர்கவிப் புலவர்முன்
முதற்கவி பாடிய முக்கட் பெருமான்        (13-ஆம் அகவல்.)

(இன்னும் வரும்.)

எஸ். ஏ. திருமலைக்கொழுந்து பிள்ளை.

---

## ஜெயகாந்தன்.

---

### அங்கம்—I. முதற்களம்.

---

(358-ம் பக்கத்தொடர்ச்சி.)

**ஜெயகாந்தன்.**—(தாய் தந்தையரை வணங்கி) பிதா! தாங்கள் சொல்லு கிறதை யான் தடுக்கிறதாக எண்ணப்படாது. அங்கு நிகழ்ந்தவை களை யெல்லாம் பார்த்து வரவேணு மென்ற அவா என்னைப்பிடர் பிடித்துந்துகின்றது. அன்றியும்ஒருக்கால் அப்பெண் பிழைத்திருப் பாளாகில் இனியாவது யாதொரு தீங்கும் அவட்கு நேரிடாது தக்க ஏற்பாடுசெய்து வருகிறேன். அம்மா, தாங்களும் என் பிதா வும் தயைசெய்து விடையளிக்க வேண்டுகிறேன்.

**சாசாங்கன்.**—இவ்வளவும் திண்டாட்டந்தான். இப்போதா தெரியும்!

**சத்ருஜித்.**—(சற்று யோசித்து) ரத்ந! உன் அபிப்பிராய மென்ன?

**ரத்நாங்கி.**—ஜெயகாந்தன் சொல்வதும் ஒருவிதத்தில் சரியாய்த்தா னிருக் கிறது. தங்கட்கும் அபிப்பிராய மிருக்கிற பட்சத்தில் தகுந்த பரி வாரங்கள் சூழ அனுப்பலாம்.

**சத்.**—ஜெயகாந்தா! உனது தாயாருக்கும் அபிப்பிராய மிருக்கிறது. ஆகை யால் நீதக்க பரிவாரங்கள் சூழச்சென்று அதி சீக்கிரத்தில் திரும்பி விடு கண்மணி!

**ஜெய.**—பிதா! அப்படியே.

**சாசா.**—மஹாராஜா! எனக்கும் விடையளிக்கவேண்டும். யானும் இளவரச ருடன் சென்று வருகின்றேன்.

**ஜெய.**—(சிரித்துவிட்டு) அப்பா! அப்பா!! நீ வேண்டவே வேண்டாம். உன்னை அழைத்துக் கொண்டுபோவது, பூனைக்குட்டியை மடியில் கட்டிக் கொண்டு சகுனம் பார்த்தது போல்தான்.

சரசா.—பலே! பலே! போகும்படி உத்திரவு கொடுத்தபிறகு சந்திரனைக் கண்ட குமுதம்போல் மலர்ந்துவிட்டதே இளவரசர் முகம். பிரபஞ்சமே ஸ்திரீகள் கையில் இருக்கின்றது. ஆனால் நான் வர வேண்டாமோ இளவரசே!

ஜேய.—வேண்டாமப்பா, வேண்டாம்.

ரத்ன.—ஏனப்பா வேண்டா மென்கிறாய்? இவனை அழைத்துக்கொண்டு போகிறது தானே.

ஜேய.—அப்பா! அவன் ஒரு நிமிஷமும் அமரிக்கையாயிரான். வேண்டவே வேண்டாம்.

சரசா.—இல்லை யில்லை இளவரசே! அமரிக்கையாகவே யிருக்கிறேன்.

ஜேய.—ஆனால் வந்து அழு.

சரசா.—அப்படியானால் நான் வரமாட்டேன். என்னால் முடியாது, இளவரசே.

ஜேய.—என்னடா இதுகாறும் வருகிறேன் வருகிறேன் என்று சொல்லிவிட்டு இப்போது முடியாது என்கிறாயே! என்ன முடியாது.

சரசா.—அழ முடியாது.

ஜேய.—யார் உன்னை அழச் சொன்னது.

சரசா.—தாங்கள் தான் இப்போது சொன்னீர்களே "வந்து அழு" என்று. (சத்ருஜித்தும் ரத்னவதியும் சிரிக்கிறார்கள்.)

ஜேய.—(சிரித்துவிட்டு) மூடசிகாமணீ! அழைத்துப் போவதற்கு அவ்வளவாக விருப்பமில்லாமையைக் குறிக்கிறதே யொழிய அழுகிறதென்பதல்ல அதன் பொருள்.

சரசா.—ஓ! அப்படியோ! நான் அப்படி பொருள் கொள்ளவில்லை. தாங்கள் நாடியிருக்கும் பெண்ணை ஒருக்கால் அக்கினி பகவான் விழுங்கி விட்டிருந்தால் தாங்கள் அழவேண்டி யிருக்குமே, அப்போது என்னையும் கூட அழும்படி இப்போதே கேட்டுக் கொள்ளுகிறீர்களாக்கும் என்று நினைத்தேன்.

ஜேய.—அடே! உன் புத்தியை என்னென்று சொல்வது. இருக்கட்டும், நீ உடனே சென்று பிரயாணத்துக்குத் தயாராயிரு. இதோ யானும் புறப்படுகிறேன்.

சரசா.—அப்படியே இளவரசே. மஹாராஜா! போய்வருகின்றேன். அம்மா! உத்திரவு.

(அரசன் அரசி போய்வா என்று உத்திர வளிக்கிறார்கள்; சரசாங்கன் போய்விடுகிறான்)

ரத்னு..—குழந்தாய்! அவன் எதாவது பரிகாசமாக வார்த்தையாடினும் அதனை நீ ஒரு பொருளாகக்கொண்டு அவன்மேல் கோபிக்காதே தெரியுமா?

ஜெய.—தெரியும் அம்மா.

சத்.—அவன் அதிக யோக்கியன். ஆனால் குரும்புத்தனமாத்திரம் அவனிடம் ஜாஸ்தியாகவிருக்கிறது. குழந்தைகள் தத்தம் தாய் தந்தையரிடத்தில் வேடிக்கையான வார்த்தைகள் சொல்லும்போது அவற்றைக் கவனியாது எவ்வாறு உவகை கொள்ளுகிறார்களோ அவ்வாறு அவன் வார்த்தைகளுக்குச் சந்தோஷிக்க வேண்டுமே தவிர கொஞ்சமும் கோபம் கொள்ளப்படாது.

(சரசாங்கன் மறுபடியும் வருகிறான்.)

ஜெய.—என்னடா மறுபடியும் வந்தனை.

சரசா.—ஒருவார்த்தை இளவரசே. நான் என்னமோ தங்களுடன் வருகிறதாகத்தான் ஒத்துக் கொண்டேன். ஒருவேளை என்னுடைய வீட்டுக்காரி போகவேண்டா மென்றால்—.

ஜெய.—நின்றுவிட்டால் போகிறது. அதற்கென்ன இப்போது.

சரசா.—அதை கேட்கத்தான் வந்தேன். ஏன் இளவரசே தாங்கள் கூடத்தானே நின்றுவிடவேண்டியது.

ஜெய.—(சிரித்துக்கொண்டே) பிதா! இம்மடையனை என்ன செய்பலாம்.

சரசா.—இல்லை மஹாராஜா! போய்விடுகிறேன்.

சத்ரு.—சந்தியாவந்தன காலமாகிறது, வாருங்கள் போகலாம்.

ஜெய.—ஆம் பிதா.

(அனைவரும் போகிறார்கள்.)

---

## (அங்கம். I: களம். 2.)

---

இடம்:—கேரளநாட்டு உத்தியானவனத்தில் சித்திரகூடமண்டபம்.

காலம்:—நடுப்பகல்.

(வீரகேசரி என்னும் அரசன் தன் சிநேகர் சூழவீற்றிருத்தல்.)

வீரகேசரி.—தனஞ்சயா! இன்று நம் கூட்டத்தில் அநேகம் பெயர் வரவில்லைபோற் காண்கிறதே.

தனஞ்சயன்.—ஆம், மகாராஜா! வீரபராக்கிரமனும் இன்னும் சிலரும் வரவில்லை.

**வீரகே.**—ஏன் அவாள் வரவில்லை? தெரியுமா உனக்கு?

**தனஞ்.**—அவர்களைத் தாங்கள் சந்திரமுகி என்னும் மாது சிரோமணியை அபகரித்து வரும்படி அனுப்பினீர்களே.

**வீரகே.**—ஆம். ஆம். தனஞ்சயா! யான் அதை மறந்துவிட்டேன்.

**பூரணன்.**—மகாராஜா! இவ்வகண்ட பூமண்டலத்தில் செங்கோல் செலுத்தாநின்ற அரசர்களில் தம்மைப்போன்ற கிருபா நோக்கமுள்ள அரசர் வேறு யார் இருக்கிறார்கள். தங்கள் நாட்டில் நடக்கும் கோதானமென்ன? பூதானமென்ன? சுவர்னதானமென்ன? வஸ்திரதானமென்ன? அன்னதானமென்ன? இவையெல்லாம் அபாரமாகத்தானே நடந்தேறிவருகிறது. தங்களைத்தான் கர்ணன் என்று கூறவேண்டும். பாரதத்தில் சொல்லப்பட்ட கர்ணனைக் கண்டவர்கள் யார்? இத்தகைய பெருமை வாய்ந்த தங்களையடுத்தவரிடத்தில் தரித்திரமும் நிலைபெறுமோ? பிரபு! அடியேன் பேரிலும் சற்று கிருபை பாலிக்கவேண்டும்.

**வீரகே.**—பூரணா! நீ எது விஷயத்தில் குறைவை யடைந்திருக்கின்றாய்? சொல். இதோ ஓர் கணப்போழ்தில் அதை நிவர்த்தி செய்கின்றேன்.

**பூர.**—மகாராஜா! வேறொன்றுமில்லை. நம்முடைய குழந்தை காப்பும் கொலுசும் வேண்டுமென்று சதா தொந்திரை செய்கிறது. நான் என்ன சொன்னாலும் கேட்கவில்லை. ஒரே பிடிவாதமாய் இருக்கிறது. வீட்டிற்குப்போனால் அதன் உபத்திரவம் பொறுக்க முடியவில்லை.

**வீரகே.**—பூரணா! இவ்வளவுதானா? இதையேன் முன்னமே என்னிடம் சொல்லியிருக்கப்படாது. யான் அப்போதே நிறைவேற்றியிருப்பேனே. ஆயினும் பெரிதல்ல. யான் ஓர் சீட்டுதருகின்றேன். அதை நமது பொக்கிஷதாரரிடத்தில் கொடுத்து உனக்கு வேண்டியதைப் பெற்றுக்கொள்.

**பூர.**—அப்படியே மகாராஜா!

**மூடமதி.**—மகாராஜா! யானும் உமது பால்ய சிநேகனாயிற்றே. எனக்கும் ஓர் உபகாரம் செய்யப்படாதா?

**வீரகே.**—யான் சொல்லுவது நன்மையாயினும் தீமையாயினும் அதற்கு யாதொரு மாறும் சொல்லாது யான் உவக்குமாறு நடந்துவரும் உங்கள் போன்றவருக்குச் சகாயம் செய்யாமல் வேறு யாருக்குத்தான் செய்யப்போகிறேன். மூடமதி! உனக்கு என்னவேண்டும்? சொல்.

**மூட.**—மகாராஜா! நமது சமுசாரத்திற்கு ஓர் வைரக்காதணி வேண்டுமாம். யான் எங்கிருந்து செய்துகொடுப்பது? யானோ பரம ஏழை. தங்கள் போன்றவருக்கு அது ஒரு பெருங்காரியமல்ல, இதனாலேயே அவளுக்கும் எனக்கும் எந்நேரமும் மன ஐக்கியம் கிடையாது.

**வீரகே.**—மூடமதி! நீ இதைப்பற்றிக் கவலைப்படவேண்டாம். யான் செய்து தருகிறேன்.

**மூட.**—பிரபு! இன்றோடே என் கிலேசம் எல்லாம் ஒழிந்தது.

**தனஞ்.**—மகாராஜா! இந்தச் சந்தர்ப்பத்தில் என்னுடைய அபிப்பிராயத்தையும் சற்று கவனிக்கவேண்டும்.

**வீரகே.**—தனஞ்சயா! என்ன சொல்?

**தனஞ்.**—மகாராஜா! தாங்கள் செய்து வரும் தானங்கட்கு அளவு சங்கியையில்லையென்றும் தாங்களே கர்ணன் என்றும் இவாள் சொல்லுகிறார்களே. தாங்கள் எப்போதாவது தங்கள் மனப்பூர்வமாய் ஒரு தருமமாவது செய்திருக்கிறீர்களா? சொல்லுங்கள்.

**மூட.**—அடே! உனக்கென்னடா தெரியுமென்று பேசுகிறாய்?

**தனஞ்.**—ஆமாம். எனக்கென்ன தெரியும் உங்களைப்போல் புளுவுகிறதற்கு.

**வீரகே.**—தனஞ்சயா! எப்போதும் உன்னுடைய குறும்பு போகிறதில்லையே.

**தனஞ்.**—இல்லை மகாராஜா. உண்மையைச் சொல்கிறேன்.

(பவரோக பண்டிதர் வருகிறார்.)

**பவரோக பண்டிதர்.**—மகாராஜா அவர்கட்கு வந்தனம் தந்தனம்.

**தன.**—அப்பா ரொம்ப இலக்கணமாக இருக்கிறதே.

**வீர.**—தனஞ்சயா! அவருக்கு ஆசனமளித்து உட்காரும்படி சொல்.

**தன.**—அப்படியே. மகாராஜா. (பவரோக பண்டிதரைப் பார்த்து) சுவாமின்! இங்கு எழுந்தருளும். (உட்கார்ந்த பின்) தாங்கள் யாரோ விண்ணப்பஞ் செய்யவேண்டும்.

**பவ.**—அப்பஞ்செய்ய எனக்குத்தெரியாது. நம்மிட சுயம்பாகி வெகு நேர்த்தியாகச் செய்வார். அவரைக்கொண்டு செய்விக்கலாம். (அனைவரும் சிரிக்கிறார்கள்). நமது தவசு பிள்ளைக்கு அப்பஞ்செய்யத் தெரியாதென்று நீங்கள் நகைக்கிறீர்கள். வெகு நேர்த்தியாகச் செய்வார். அதற்கு நான் உத்திரவாதி. மகாராஜா அவர்கள் உத்திரவளிக்கும் பட்சத்தில் இதோ ஒரு நொடியில் செய்விக்கிறேன்.

**வீர.**—இருக்கட்டும். தாங்கள் எந்த ஊர்?

பவ.—யாமிருந்தது கருவூர். இப்போதிருப்பதிவ்வூர். இனிப்போவது பேரூர்.

தன.—ஐயா ! தங்கள் பெயரென்ன ?

பவ.—நம் பெயரா கேட்கின்றீர்.

பன.—ஆம் சொல்லும்.

தவ.—அதள விதள பாதள தராதள அட்ட வட்ட சட்ட திட்ட—,மறந்து விட்டேன். ஞாபகப்படுத்திச் சொல்லுகிறேன்.

தன.—என்ன ஐயா ! உமது பெயரையே மறந்து விட்டீர்.

பவ.—இப்போதுதான் ஞாபகம் வருகிறது. இதோ சொல்லிப் போடுகி றேன். சற்று இரும். (யோசிக்கிறார்)

தன.—இன்னம்—

பவ.—இதோ. ஐயோ! வந்தது போய் விட்டதே.

தன.—என்ன ஐயா இது. உமக்கு அதிக ஞாபக சத்திபோலிருக்கிறதே.

பவ.—இதோ வந்துடுது. வந்துடுது.

மூட.—எங்கே ஐயா வந்து விட்டது.

பவ.—ஞாபகத்துக்கு.

தன.—எதோ சொல்லும் பார்ப்போம்.

பவ.—அதள விதள பாதள தராதள அட்டவட்ட சட்டதிட்ட வீர தீர சூர அகோர இந்திர சந்திர எந்திர தந்திர மந்திர ஜோஸ்ய வைத்திய, பவரோக பண்டிதர் ஐயா என் பெயர்.

தன.—சபாஷ். நன்றாயிருக்கிறது! மெத்த நன்றாயிருக்கிறது! இருக்கட்டும். தங்கள் பெயர்தான் இவ்வாறு ஆயிற்றே, தங்கள் தகப்பனார் பெயரோ ?

மூட.—அதுவும் உம்முடைய பெயரைப்போல்தான் நீளுமோ ?

பவ.—ஆம். இன்னம் பெரிதாகவேதானிருக்கும். ஆனால்யான் அதைமறந்து விட்டேன்.

பூர.—உம்முடைய பெயரையே முதலில் மறந்து விட்டீரே ? உங்கள் தகப் பனார் பெயர் எப்படி ஞாபகமிருக்கும் !

தன.—போகட்டும். தாம் ஏது இவ்வளவு தூரம் தயவு செய்தது.

பவ.—வேறொன்றுமில்லை. எமது வாத்தியார் எமக்கு கல்விப்பயிற்சி செய்து வந்த காலத்தில் "மருந்தே யாயினும் விருந்தோ டுண்" என்று சொல்லிக் கொடுத்திருந்தார். அந்த குருவாக்கைப் பரிபா லனஞ் செய்ய வேண்டாமா ? வேண்டுமா ?

தன.—செய்யத்தான் வேண்டும்.

பவ.—சரி. ரொம்ப சரி.

தன.—மெத்த சரி. அதிக சரி. சரி. சரி.

பவ.—நிற்க. எனக்கு இப்போது யமகண்ட வலி ஒன்று வந்திருக்கிறது. அதற்குத்தகுந்த ஔஷதம் அநேக நாள் வரையில் கிடைக்காமல் எமது வாகட புத்தகத்தைப் புரட்டி புரட்டி மூலை முடக்குகள் எல்லாம் பார்த்த பிறகு ஓர் சந்தில் அகப்பட்டது ஐயா ஓர் தகுதியான மருந்து.

(இன்னும் வரும்.)

தி. மே. முருகேச முதலியார்.

## புத்தகக் குறிப்புகள்.

**டாக்டர் மில்லர் சரித்திரம்:**—இப்பெயரிய ஒரு புத்தகம் எம்முடைய பார்வைக்கனுப்பப்பட்டிருக்கிறது. இதை ஆக்கியோர் ம-ா-ா-ஸ்ரீ டி. இராஜரத்தினம் பிள்ளையவர்கள். இப்புத்தகத்தின் விஷய விசேடத்தைப்பற்றி மறுமாசத்திய பத்திரிகையி லெடுத்தெழுதுவாம்.

**வால்மீகி இராமாயண வசனம், பாலகாண்டம்:**—இஃதெம்பார்வைக்கனுப்பப்பட்டுச் சின்னுளாகின்றன. இதனையியற்றியோர் பிரம்மஸ்ரீ எஸ். எம். நடேச சாஸ்திரியவர்கள். இது சிறுவர் சிறுமியருபயோகத்திற்கும் முதனூலை வாசித்தறியக்கூடாதார் அதிலுள்ள விஷயம் இன்னவென எளிதில் தெரிந்துகொள்ளுதற்பொருட்டும் எழுதுவிக்கப்பட்டதாகத் தோன்றுகிறது. இஃது எவ்வளவு பிரயோஜனமாமென்பது மறு சஞ்சிகையில் விளக்கிக்கூறப்படும். இதன் விலை, பேபர், பயண்டு, இவைகளுக்குத் தக்கபடி ரூபா 2-0-0, 1-12-0 ஆக இருக்கிறது.

## சமாசாரக் குறிப்புகள்.

**போயர்கள்:**—சென்ற மாதத்தில் போயர் யுத்தவீரர்களில் 500-பேரை கப்பல் மார்க்கமாய் இங்குக்கொணர்ந்து பிறகு றயில் மார்க்கமாய் பல்லாரிக்கு அனுப்புவித்தார்கள். இவர்கள் காப்பிற்கு 250 ஆங்கில வீரர்கள் உடன் சென்றார்கள்.

**சென்னை கவர்ன்மெண்டு:**—இதில் இரண்டாவது மெம்பராகிய வின்டர்பாதம் என்பவர் நீலகிரியில் ஒருநாள் மாலைப்போழ்து பண்டியில் சவாரி

செய்துகொண்டு போகையில் குதிரை மருண்டு பண்டி சாயவே இவரிடது இடதுகையிற் காயம்பட்டது. காயத்தின் கொடுமை பொறுக்கமாட்டாது அக்கையைச் சத்திரமிட்டறுக்கவேண்டி வந்தது. இடக்கை போய் வலக்கையினுடனிருக்கிறார். அவர் அங்கவீனமடைந்ததற்கு அவரை யறிந்தோர் யறியாதோர் யாரும் அவலமுறவேண்டியதாயிருக்கிறது. ஐயோ பாபம்! கூடிய சீக்கிரத்தில் சுகமடைவாரென நம்புகிறோம்.

முதல் மெம்பராயிருந்த அரண்டல் துரையவர்களுக்கு இதனினும் பெரிய உத்தியோகமகப்பட்டுவிட்டது. அவர் அதிக அதிர்ஷ்டசாலி யாதலின் கவர்னர் ஜனரல் சபையினங்கத்தினரிலொருவராக ஆக்கப்பட்டார். அதனிமித்தம் இவ்வேலையைவிட்டு நாளது மீ 14உ ஸிம்லாவுக்குப் போய்விட்டார். இவர்க்குப் பதிலாக கனம் தாம்ஸன் துரையவர்களை மெம்பராக ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

**பெண்கல்வி:**—முன்னிலும் இப்போது பெண்கல்வி விருத்தியடைந்துகொண்டு வருகிறது. ஆயினும் உயர்தரக் கல்வியோ அதிமாய்ப் பரவவில்லை. பிராமணப் பெண்கள் மற்றை இந்துப்பெண்கள் கல்வியில் ஊக்கம் வைத்து படிக்க முயல்கிறார்களில்லை. கிறிஸ்தவப் பெண்கள் மாத்திரம் படிப்பில் ஊக்கம் வைத்துக் கற்று முன்னுக்கு வருகிறார்கள். இவர்களிலும் உயர்தரப் பட்டம் பெற்றவர்கள் சிலரே. இந்தியாவிலுள்ள பற்பல சர்வ கலாசாலைகளிலும் எம். ஏ. பட்டம் பெற்ற ஸ்திரீகள் அறுவர். சென்னையில் நாளது வருஷத்தில் நடந்த எம். ஏ. பரீக்ஷையிற் றேறியவர்களில் பெண்பாலார் ஒருவர். கமலரத்னம் என்பது அவர் தம்பெயர். அவர் மிஸ்டர் சத்தியநாதன் என்பவருடைய மனைவியார். மற்றைவரில் கல்கத்தாவி லிருவருளர். அலகாபாத்தில் ஒருவர், லக்நௌவில் ஒருவர், அமடாபாத்திலொருவருளர்.

**விக்டோரியா ஞாபகச்சின்ன நிதி, சென்னை.**—நாளது மீ 10 - தேதி வரையில் கையொப்பத் தொகை ரூபா 67,825-0-0 ஆகிறது.

**ஒரு ஆங்கிலேயர் தகனம்:**—பம்பாய் ஹைகோர்ட்டில் ஜட்ஜாயிருந்து, பாலகங்காதர டிலக் கேஸ் நடத்திய பிறகு 1898ஞூ அலகாபாத் ஹைகோர்ட்டு முதல் ஜட்ஜ் உத்தியோகம் பெற்ற ஜஸ்டிஸ் ஸ்டிராச்சி துரையவர்கள் கொஞ்ச நாள் சுரத்தினாற் பீடிக்கப்பட்டு தேகசௌக்கியத்தின் பொருட்டு ஸிம்லாவிற்குச் சென்றனர். சுரம் அதிகப்பட்டு சென்ற 15உ புதவாரம் இரவு இறந்துவிட்டனர். அவருடைய விருப்பத்தின்படி அவருடலம் ஐரோப்பியர் வழக்கத்தின்படி பிருதிவியிலிடப்படாது அக்கினியினிடம் சேர்ப்பிக்கப்பட்டது.